விலை: 50.00
பக்கங்கள் - 16

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 26
ஒலி 287 வள்ளுவர் ஆண்டு 2056 புரட்டாதி 16 வியாழக்கிழமை (02.10.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## செம்மணிப் புதைகுழி அகழ்வுக்கான பாதீடு எதிர்வரும் வாரங்களில் சமர்ப்பிக்கப்படும்

### வழக்கு விசாரணை 13ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிக்கான பாதீட்டுக்கான அங்கீகார அறிக்கை எதிர்வரும் வாரங்களில் மன்றில் சமர்ப்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டதை அடுத்து வழக்கு விசாரணைகள் எதிர்வரும் 13ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டுள்ளது.

செம்மணி மனிதப் புதைகுழி வழக்கு விசாரணைகள் நேற்றுப் புதன்கிழமை யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் நடைபெற்ற போது பாதீட்டுக்கான அங்கீகார அறிக்கையை மன்றில் சமர்ப்பிக்க அரச சட்டத்தரணி கால அவகாசம் கேட்டமையினால் வழக்கினை எதிர்வரும் 13ஆம் திகதி எடுத்துக் கொள்ள நீதவான் தவணையிட்டார்.

செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான இரண்டாம் கட்ட அகழ்வுப் 15ஆம் பக்கம் பார்க்க

## ஜெனிவா பயணமானார் சிறீதரன் எம்.பி



(ஜெனிவா)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத் தொடரின் பக்க நிகழ்வில் கலந்து கொள்வதற்காக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுத் 15ஆம் பக்கம் பார்க்க

ஒக்ரோபர் மாத இராசி பலன்கள்
இன்று முதல் உங்கள் வலம்புரியில் வாசிக்கத் தவறாதீர்கள்

# சர்வதேச நீதி கோரி உறவுகள் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

- உள்ளகப் பொறிமுறையை வலியுறுத்தும் ஐ.நாவின் அறிக்கை தீயிட்டு எரிப்பு.
- தீப்பந்தப் போராட்டமும் முன்னெடுப்பு.
- சுழற்சி முறையிலான உணவுத் தவிர்ப்பும் நிறைவடைந்தது.





(16ஆம் பக்கம் பார்க்க)

## ஆசிரியர் சேவைக்கு அபிவிருத்தி அதிகாரிகள்

(கொழும்பு)

பாடசாலைகளில் பணிபுரியும் அபிவிருத்தி அதிகாரிகளை 15ஆம் பக்கம் பார்க்க

## நாட்டை ஆட்சி செய்தவர்களே வசிம் தாஜுதீனை கொலை செய்தனர்

### அமைச்சர் பிமல் ரத்நாயக்க



(அநுராதபுரம்)

நாட்டை ஆட்சி செய்தவர்களே ரக்பி வீரர் வசிம் தாஜுதீனை படுகொலை செய்தனர் என அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார். 15ஆம் பக்கம் பார்க்க

### போர்க்காலத்தில் வெளியேறியோர்


## நாடு திரும்பும்போது ஏற்படும் சவால்களை தீர்க்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

போர்க்காலச் சூழ்நிலையில் இலங்கையிலிருந்து சட்டவிரோதமாக வெளியேறியோர் மீண்டும் நாட்டுக்கு வரும்போது ஏற்படும் சவால்களைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தமிழகத்திலிருந்து வரும் அகதிகள் சர்வதேச விமான நிலையங்களில் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பாக வடக்கு மாகாண ஆளுநர் 15ஆம் பக்கம் பார்க்க

## முகமாலை வடக்குப் பகுதியில் 31 குண்டுகள் மீட்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட முகமாலை வடக்குப் பகுதியில் வெடிக்காத நிலையில் 31 குண்டுகள் நேற்று மீட்கப்பட்டுள்ளன.

முகமாலை வடக்குப் பகுதியில் வீட்டு உரிமையாளர் ஒருவர் தமது வீட்டில் பள்ளம் தோண்டியுள்ளார்.

இதன்போது 15ஆம் பக்கம் பார்க்க

## 86 கைக்குண்டுகளுடன் வவுனியாவில் இருவர் கைது

(வவுனியா)

வவுனியா, செட்டிகுளம் பகுதியில் 86 கைக்குண்டுகளுடன் சந்தேகநபர்கள் இருவர் நேற்று கைது செய்யப்பட்டதாகப் பொலிஸார் 15ஆம் பக்கம் பார்க்க

## பொலிகண்டி ஆலடியில் தீக்கிரையானது படகு

### பல இலட்சம் பெறுமதியான பொருட்கள் நாசம்

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை - பொலிகண்டி ஆலடிப் பகுதியில் படகு மற்றும் கடற்றொழில் உபகரணங்கள் தீக்கிரையாகி உள்ளன.

நேற்று மதியம் 1.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவத்திற்கான காரணம் இதுவரைக்கும் தெரியவரவில்லை. 15ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சியில் பெண் ஒருவரிடம்

# பணம் வைப்புச் செய்வது போல் ஏமாற்றி நூதன முறையில் திருட்டு

வங்கியொன்றின் பண வைப்பு இயந்திரத்தில், பெண்ணொருவரின் பணத்தை வங்கிக்கணக்கொன்றுக்கு வைப்பிலிட உதவி செய்வது போல் வந்த இளைஞன், அந்தப் பணத்தை தனது வங்கிக்கணக்கில் வைப்பிலிட்டு, பெண்ணை ஏமாற்றிச் சென்ற சம்பவம் ஒன்று கிளிநொச்சியில் அண்மையில் இடம் பெற்றுள்ளது.

கிளிநொச்சி பொன்நகர் கிராமத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் தனது வீட்டு மின்சாரக் கட்டணத்தை செலுத்துவதற்காக வங்கியொன்றுக்குச் சென்றுள்ளார்.

அங்குள்ள பண வைப்பு இயந்திரத்தில் பணத்தை வைப்பிலிடத் தெரியாத அந்தப் பெண், மின் கட்டணத்தை வைப்புச் செய்வதற்காக அருகில் நின்ற இளைஞர் ஒருவரிடம் உதவி கோரியுள்ளார்.

பணத்தை வைப்பிலிடுவதற்காக அந்த இளைஞனிடம் தனது வீட்டு மின்சார கணக்குக் இலக்கத்தையும் ஆறாயிரம் ரூபாய் பணத்தையும் வழங்கியுள்ளார்.

அந்த இளைஞன் அப்பெண்ணுக்கு உதவி செய்வது போல் செயற்பட்டு அவர் வழங்கிய கணக்கு இலக்கத்துக்கு பணத்தை வைப்புச் செய்வது போல் பாசாங்கு காட்டி தனது வங்கிக் கணக்கு இலக்கத்திற்கு பணத்தை வைப்புச் செய்துள்ளார்.

பின், அருகில் இருந்த குப்பை கூடைக்குள் இருந்து பணம் வைப்புச் செய்த பற்றுச்சீட்டு ஒன்றை பெண்ணிடம் கொடுத்துவிட்டு, அவ்விடத்தை விட்டுச் சென்றுள்ளார். வீடு திரும்பிய பெண், அந்தப் பற்றுச்சீட்டை மகனிடம் காட்டியபோதே அது மின்கட்டணத்துக்கான கணக்கில் வைப்பிலிட்டதற்குரிய பற்றுச்சீட்டு அல்ல என்பது தெரியவந்துள்ளது.

பின்னர் அந்தப் பெண் குறித்த வங்கிக்குச் சென்று இளைஞனின் வங்கிக் கணக்கு பற்றிய விபரங்களை கேட்டு நடந்த சம்பவத்தை விபரித்துள்ளார். அதற்கு வங்கி நிர்வாகத்தினர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துவிட்டு முறைப்பாட்டு சீட்டைக் கொண்டுவந்தால் மாத்திரமே விபரங்களை வழங்க முடியும் எனக் கூறியுள்ளனர்.

அதனையடுத்து, முறைப்பாடு அளிப்பதற்காக அப்பெண் பொலிஸ் நிலையத்துக்குச் சென்றுள்ளார். அங்கு பொலிஸ் உத்தியோகத்தர்கள், **"ஆறாயிரம் ரூபாய்க்கெல்லாம் முறைப்பாடு எடுக்க முடியாது"** எனத் தெரிவித்துள்ளனர். (ம-7)

## முல்லைத்தீவு தேவிபுரத்தில்

### புலிக்கொடியுடன் வெடிபொருட்கள் மீட்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தேவிபுரம் பகுதியிலுள்ள தோட்டக்காணியிலிருந்து வெடிபொருட்களுடன் புலிக்கொடி மீட்கப்பட்டுள்ளன.

புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தேவிபுரம் ஆ பகுதியிலுள்ள 168ஆம் இலக்க தென்னம் தோட்டக் காணி உரிமையாளரினால் நேற்று துப்பரவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டபோது காணியில் ஆர்.பி.ஜி ரக குண்டுகள், புலிக்கொடி போன்றவை இருந்துள்ளதைக் கண்டுள்ளார்.

இதையடுத்து புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் காணியின் உரிமையாளரினால் இது தொடர்பில் அறிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன் நீதிமன்ற அனுமதியுடன் விஷேட அதிரடிப்படையினரின் உதவியுடன் அப்பகுதியில் சோதனை நடவடிக்கை மேற்கொண்டு வெடிபொருட்களை அகற்றினர். (ம-7,299)

## செப்ரெம்பர் மாதம்

# ஒரு இலட்சத்திற்கு அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருகை

(கொழும்பு)

இந்த ஆண்டின் செப்ரெம்பர் மாதத்தில் 148,673 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வந்துள்ளனர்.

அவர்களில் அதிக எண்ணிக்கையிலானவர்கள் இந்தியாவிலிருந்து வந்துள்ளனர்.

அதன்படி, இந்த ஆண்டு இதுவரை நாட்டிற்கு வந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 1,715,196 ஆக அதிகரித்துள்ளது.

இதற்கிடையில், ஓகஸ்ட் மாதத்தில் சுற்றுலா வருவாய் மூலம் இலங்கை 259 மில்லியன் அமெரிக்க டொலர் பெற்றதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது. (ம-7)




அமரர்

பவாள தேவி சந்திரசேகரம்

திதி : 02.10.2025

பதினைந்து ஆ[illegible]டுகள் கழிந்தாலும் ஓவியமாய் பதிந்திருக்கிறது
உங்க[illegible] முகம் அம்மா! காவியமாய் வாழ்ந்தீர்கள்
உம்[illegible] காலமெல்லாம் நினைத்திருப்போம்
தேனினிய[illegible]ங்கள் குணம் தேடி நாம் உருகுகின்றோம்
ஆண்டவன் காலடியில் உங்கள்
ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

பிள்ளைகள்
ச.அச்சுதன் ச.நிறோஜன்
ச.அரங்கனா ச.நிறாதன்

(1613)


## எட்டு மாதங்களில்

# வாகன இறக்குமதிக்காக 1,007.5 மில்லியன் செலவு

இலங்கைக்குள் வாகன இறக்குமதிக்கான கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதன் மூலம், 2025 ஜனவரி முதல் ஓகஸ்ட் வரையிலான 8 மாத காலப்பகுதியில் வாகன இறக்குமதிக்காக மொத்தம் 1,007.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிடப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இது இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட 2025 ஜூன் மாதத்துக்கான இலங்கையின் வெளிநாட்டுத்துறை செயலாற்றம் தொடர்பான அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு ஒரே மாதத்தில் அதிகபட்ச வாகன இறக்குமதி செலவு ஓகஸ்ட் மாதத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2025 ஆம் ஆண்டில் இதுவரை ஒவ்வொரு மாதமும் நாட்டிற்குள் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான செலவு வருமாறு:

ஜனவரி - 29.1 மில்லியன் டொலர்கள்
பெப்ரவரி - 22.3 மில்லியன் டொலர்கள்
மார்ச் - 54.0 மில்லியன் டொலர்கள்
ஏப்ரல்- 145.6 மில்லியன் டொலர்கள்
மே -125.2 மில்லியன் டொலர்கள்
ஜூன் - 169.6 மில்லியன் டொலர்கள்
ஜூலை - 206.0 மில்லியன் டொலர்கள்
ஓகஸ்ட்- 255.7 மில்லியன் டொலர்கள் (ம-7)


யாழ் செந்தமிழன் ஸ்ருடியோ

(எங்கும் இல்லாத விலைக்கழிவுடன்)



திருமணம்-நீராட்டுவிழா-பிறந்தநாள் விழா
போன்ற அனைத்து நிகழ்வுகளையும்
சிறந்தமுறையில் பெற்றுக்கொள்ள
இன்றே தொடர்புகொள்ளுங்கள்.

மேலதிக தொடர்புகளுக்கு
077 6405572 / 076 2345956

(5567)

மகாவிஷ்ணு கட்டடப்பொருள் விற்பனை நிலையம்

தரமான பொருட்கள் மிகக் குறைந்த விலையில் நீங்கள் இருக்கும் இடத்திற்கு நாங்கள் கொண்டு வந்து தருவோம்.

- 1 ரக்டர் 5 நூல் சல்லி – 16,000/= ரூபா
- 1 ரக்டர் டஸ்ற் – 12,000/= ரூபா
- அத்திவாரக் கல் (6X9) – 15,000/= ரூபா

(இந்த விலையில் பறித்து விடப்படும்)

(5568)

ஏனைய கட்டடப் பொருட்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் நேரடியாக வந்து பெற்றுக் கொள்ளலாம்.

பழைய கடை இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இல.530, நாவலர் வீதி | 077 905 0185, 077 847 0341 | உரிமையாளர் : வ.ராசு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேருந்து நிறுத்த உணவகங்களில் அதிக விலை கொடுக்க நேரிட்டால் முறையிடுங்கள்!

**(கொழும்பு) — நீண்டதூர சேவை பேருந்துகள், பயணிகள் தேநீர் அருந்துவதற்காக நிறுத்தப்படும் உணவகங்களில், உணவுகள் மற்றும் பானங்கள் நிர்ணயிக்கப்பட்ட விலையை விட அதிகமாக விற்கப்பட்டால், அதுகுறித்து முறைப்பாடளிக்குமாறு நுகர்வோர் விவகார அதிகாரசபை அறிவுறுத்தியுள்ளது.**

அந்த அதிகாரசபையின் "1977" என்ற துரித இலக்கத்துக்கு இத்தகைய முறைப்பாடுகளை வழங்குமாறு பொதுமக்கள் கோரப்பட்டுள்ளனர்.

இந்த அறிவுறுத்தல் பெந்தலுவ-பரகடுவ பகுதியில் உள்ள ஓர் உணவகம் தொடர்பாக வந்த முறைப்பாட்டை தொடர்ந்து வெளியிடப்பட்டுள்ளது.

அங்கு தண்ணீர் போத்தல்கள் உள்ளிட்ட பொருட்கள் அதிக விலையில் விற்பனை செய்யப்பட்டமை குறித்து முறைப்பாடளிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து, நுகர்வோர் விவகார அதிகார சபையின் இரத்தினபுரி மாவட்டக் கிளை அதிகாரிகள் சோதனை நடத்தி, உணவக உரிமையாளரை இரத்தினபுரி நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியதையடுத்து, அவருக்கு ஒரு இலட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## ஏடு தொடக்குதல்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் விஜயதசமி நன்நாளான இன்று காலை 9.30 மணிக்கு குழந்தைகளுக்கு ஏடு தொடக்குதல் நிகழ்வு நடைபெறவுள்ளது.

தேவஸ்தானத் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள் குழந்தைகளுக்கு ஏடு தொடக்கி வைப்பார்.

ஆசாரசீலர்களாக உரிய நேரத்திற்கு வருகைதந்து உங்கள் மழலைச் செல்வங்களின் கல்விப் பயணத்தை அம்பாள் அருளோடு ஆரம்பியுங்கள் என ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (8)

# நவநிதிகளும் பெருகிட நல்லருள் தரும் விஜயதசமி வெற்றித்திருநாள்

**குபேரனிடம் உள்ள ஒன்பது நிதிகள் என்னென்ன தெரியுமா?**

சங்கநிதி, பதுமநிதி, மகர நிதி, கச்சபநிதி, முகுட நிதி, நந்த நிதி , நீல நிதி, கர்வ நிதி, மஹாபதும நிதி ஆகிய ஒன்பதையும் நவநிதிகள் எனப் போற்றுகின்றன புராணங்கள். இவற்றின் மூலமாகவே உலக மாந்தர்களுக்குத் தேவையான வாழ்வியல் செல்வங்களை, இறை ஆணையுடன் வழங்கி பரிபாலிக்கிறானாம் குபேரன்.

இந்த நிதிச்செல்வங்களின் பயனை நாமும் பெற முடியுமா? நிச்சயம் முடியும். சகல மங்கலங்களையும் தந்தருளும் நவராத்திரி புண்ணிய காலத்தில் அம்பாளை வழிபட்டால், அவளருளால் நமக்கும் குபேர சம்பத்துகள் கிடைக்கும் நம் வீட்டைத்தேடி நவநிதிகளும் வந்து சேரும்.

ஆமாம்! அகில உலகங்களையும் படைத்து ரட்சிக்கும் ஜகன் மாதாவான பராசக்தி, கருணை கொண்டு உயிர்களுக்கெல்லாம் அருட்கடாட்சிக்கும் அற்புதமான காலம்தான் நவராத்திரி.

தனம், தானியம், நிலையான இன்பம், நீண்ட ஆயுள், ஆரோக்கியம், ஸ்வர்க்கம், மோட்சம் என ஒரு மனிதனுக்கு வேண்டிய அனைத்தையும் தரக் கூடியது நவராத்திரி விரதம். குழந்தைப் பேறு இல்லாதவர்களுக்கு நிச்சயம் குழந்தை பாக்கியம் கிட்டும். படிப்பில் மந்தமாக இருப்பவர்கள் இந்த விரதத்தைக் கடைப்பிடிப்பதால், உயர்ந்த நிலையை அடையலாம். அதுமட்டுமா? நவகிரகங்களினால் ஆபத்து ஏற்படாமல் இருக்க இந்த நவராத்திரி காலங்களில் அனைவரும் அம்பிகையை வழிபடுதல் வேண்டும்.

**தேவி பாகவதம் சொல்லும் வழிமுறைகள்**

நவராத்திரி வழிபாடு செய்யும் வழிமுறைகளை தேவி பாகவதம் நமக்கு அழகாகச் சொல்லித் தருகிறது. வியாச முனிவரிடம் நவராத்திரி காலத்தின் மகத்துவத்தையும், அந்த விரதத்தை அனுஷ்டிக்கும் விபரங்களையும் கூறும்படி பணிவுடன் வேண்டிக் கொண்டான் ஜனமேஜயன். அவனுக்கு வியாச மகரிஷி தக்கபடி விளக்கம் அளித்தார். அது பற்றிய விவரத்தை நாமும் அறிவோம்.

நவராத்திரி இரண்டு வகை. ஒன்று வஸந்த ருதுக் காலத்தில் (சித்திரை மாதம் அமாவாசைக்கு பிறகு 9 நாட்கள்) கொண்டாடப்படும் வஸந்த நவராத்திரி. மற்றொன்று சரத் காலத்தில் (புரட்டாசி அமாவாசைக்குப் பிறகு 9 நாட்கள்) கொண்டாடப்படும் சரத் நவராத்திரி.

இவை இரண்டும் எமதருமனின் இரண்டு கோரைப் பற்கள் போன்றவை என்பதால், இந்தக் காலங்களில் அனைத்து பிராணிகளுக்கும் தீயவை ஏற்பட



வாய்ப்பு உண்டு. நோய்கள், இயற்கை சீற்றங்கள், மனக் குழப்பங்கள் போன்றவையும் ஏற்படலாம். ஆகவே இந்த காலங்களில் புத்திமான்களும், நல்லதையே விரும்புபவர்களும் சண்டி தேவியை ஆராதனம் செய்ய வேண்டும் என்று வியாசர் கூறுகிறார்.

ஜகத்குரு ஆதிசங்கர பகவத்பாதர் 'ஆப்தி கிம் கரணீயம்' எனும் கேள்வியைக் (ஆபத்து காலத்தில் என்ன செய்ய வேண்டும்) கேட்டு, அதற்குரிய பதிலையும் தருகிறார். 'ஸ்மரணீயம் சரணயுகளம் அம்பாயா:' அதாவது, அம்பாளின் பாத கமலங்களை நினை என்று விடையளிக்கிறார். அதற்கேற்ப புரட்டாசி மாதத்தில் வரும் அமாவாசையை அடுத்து வரும் பிரதமை தொடங்கி 9 நாட்கள் அம்பாளை வழிபட வேண்டும்.

**முப்பெருந்தேவியரைப் போற்றுவோம்**

வரமுனி என்றொரு முனிவர் இருந்தார். மிதமிஞ்சிய அவரது கர்வத்தின் காரணமாக, கடும் சாபம் பெற்றார். அதன் விளைவு, முனிவர் மகிஷனாக மாறினார். தேவலோகத்தை இன்னல்கள் சூழ ஆரம்பித்தது. இந்திரன் முதலான தேவர்களை பலவாறு துன்புறுத்திய மகிஷன், அவர்களை விரட்டியடித்து விட்டு தேவலோகத்தைக் கைப்பற்றினான்.

இந்திரன் முதலான தேவர்கள் மும்மூர்த்தியரைச் சரணடைந்தனர். அவர்கள் வழிகாட்டுதல்படி அனைவரும் ஆதி சக்தியை வணங்கி அபயம் அளிக்க வேண்டிக் கொண்டனர். அவர்களையும் உலக உயிர்கள்ளயும் காக்கும் பொருட்டு, மும்மூர்த்தியரின் சக்திகளும் ஒன்றுகூடி உருவானவளே துர்கை.

தனது திருக்கரங்களில்... ஈசனின் சூலம், விஷ்ணுவின் சக்ராயுதம், பிரம்மனின் கமண்டலம், இந்திரனின் வஜ்ராயுதம், அக்னி-வருணன் ஆகியோரின் சக்தி, வாயு பகவானின் வில், ஐராவதத்தின் மணி, எமதருமனின் தண்டம், நிருதி தேவனின் பாசம், காலனின் கத்தி-கேடயம் ஆகியவற்றை ஏந்தி நின்றாள் தேவி.

அத்துடன், சமுத்திர தேவன் தாமரை மலரையும், குபேரன் பாணங்கள் நிறைந்த பாத்திரத்தையும், ஹிமவான்- சக்தி மிக்க சிம்மத்தை வாகனமாகவும், சூரிய தேவன் - தேக காந்தியையும், இன்னும் பிற தேவர்கள் பல்வேறு ஆடை-ஆபரணங்களையும் அளித்ததால், சர்வலங்கார பூஷணியாக திகழ்ந்த துர்காதேவி, அசுரன் மகிஷனை வதம் செய்தாள். தேவர்கள் பூமாரிப் பொழிந்தனர்.

அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலை நாட்டிய துர்கையின் மகாத்மியத்தைப் போற்றுவதே நவராத்திரி வைபவம். முதல் மூன்று நாட்கள் துர்கா தேவியையும், அடுத்த மூன்று நாட்கள் மகாலட்சுமியையும், கடைசி மூன்று நாட்கள் சரஸ்வதியையும் வழிபடுவார்கள். இந்த நாள்களில் மனதார அம்பாளைத் தியானித்து ஹதுர்க்காம் தேவீம் சரணமஹம் பிரபத்யே ஸ°தரஸிதரஸே நம: எனக்கூறி வணங்கினாலே போதும் சகல நன்மைகளும் நம்மை நாடிவரும் நம் வாழ்க்கைச் செழிக்கும்!

**விஜய தசமி திருநாளின் மகிமைகள்**

வெற்றிகளைத் தரும் நாள் விஜய தசமி என்பது பெரியோர்களின் வாக்கு. அசுரர்களுடன் போரிட்டு அவர்களை வதைத்த சக்தியின் வெற்றியை தேவர்கள் யாவரும் கொண்டாடி மகிழ்ந்த திருநாள் விஜயதசமி.

பத்து தலைகளை உடைய இராவணனை வதம் செய்ததால் இந்த நவராத்திரியின் கடைசி நாளான விஜய தசமி 'தசரா' என்றும் அழைக்கப்படுகிறது (தச ஹரா - தசரா). இதையொட்டி, வட மாநிலங்களில் ராம்லீலா வைபவம் நிகழும்.

மேலும், வில்லுக்கு விஜயன் எனப் போற்றப்படும் அர்ஜ°னனுக்கு வெற்றி நல்கிய திருநாளும் கூட! அதோடு, நாம் துவங்கும் நல்ல காரியங்கள் வெற்றி பெற துணையாக நிற்கும் திருநாளும் இதுவே. எனவேதான், நம் முன்னோர் கல்வி ஆலைகளையும், கலாசாலைகளையும் இந்த நாளிலேயே தொடங்கினார்கள்.

அதேபோன்று, புதிய கலைகளைத் துவக்கவும், வித்தையில் சிறந்து விளங்கிட அக்ஷராப்யாஸம் என சொல்லக் கூடிய சடங்கினை ஆரம்பிக்கவும் சிறந்த நாள் விஜயதசமி.

மகார்ாஷ்டிராவில் வன்னிமரத்தை விஜயதசமி தினத்தன்று வழிபடுவதோடு அதன் இலைகளையும் பறிப்பர். அங்கு வன்னி மரத்தை செல்வம் தரும் மரமாக கருதுகின்றனர். இளைஞர்கள் இந்த நாளில் வன்னி இலைகளைப் பெரியவர்களின் காலடியில் வைத்து அவர்களது ஆசியைப் பெறுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## மகளிர் உலகக்கிண்ணத் தொடரை வெற்றியுடன் தொடங்கிய இந்தியா



கவுகாத்தியில் நேற்று முன்தினம் நடைபெற்ற 2025 ஐசிசி மகளிர் உலகக் கிண்ணத் தொடரின் முதல் போட்டியில் இந்திய அணி இலங்கையை 59 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோற்கடித்தது.

அறிமுக வீராங்கனை அமன் ஜோத் கவுருடன் இணைந்து அரை சதம் அடித்ததுடன், பந்து வீச்சில் மூன்று விக்கெட்டுகளையும் வீழ்த்திய தீப்தி சர்மாவின் அனுபவம் இந்த ஆட்டத்தில் வெற்றியை பெற்றுக் கொள்ள இந்திய அணிக்கு உதவியது.

குவஹாத்தி பர்சபரா கிரிக்கெட் மைதானத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாக விருந்த இரு அணிகளுக்கும் இடையிலான 2025 உலகக் கிண்ணத்தின் முதல் ஆட்டமானது மழை குறுக்கிட்டதனால் பாதிக்கப்பட்டது.

இதையடுத்து போட்டி சுமார் 90 நிமிடங்கள் கழித்து ஆரம்பமானது.

இதனால், ஓவர்கள் 47 ஆக குறைக்கப்பட்டன.போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணியானது நிர்ணயிக்கப்பட்ட ஓவர்களில் எட்டு விக்கெட் இழப்புக்கு 269 ஓட்டங்களை பெற்றனர்.

இந்திய அணி சார்பில் அமன் ஜோத் கவுர் 57 (56) ஓட்டங்களையும், தீப்தி சர்மா 53 (53) ஓட்டங்களையும், ஹர்லீன் தியோல் 48 (64) ஓட்டங்களையும் அதிகபடியாக பெற்றனர்.

பந்து வீச்சில் இலங்கை அணி சார்பில் இனோகா ரணவீர 4 விக்கெட்டுகளையும், உதேஷிகா பிரபோதானி 2 விக்கெட்டுகளையும் அதிகபடியாக வீழ்த்தினர்.

பின்னர், பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணியானது 45.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 211 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. இதன் மூலம் 59 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்திய அணி வெற்றி பெற்றது.

இலங்கை அணி சார்பில் அதிகபடியாக அணித் தலைவி சாமரி அத்தபத்து 43 ஓட்டங்களை அதிகபடியாக எடுத்தார்.

இந்தியா சார்பில் பந்து வீச்சில் தீப்தி சர்மா 3 விக்கெட்டுகளையும், சினே ராணா மற்றும் ஸ்ரீ சரணி ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் அதிகப்படியாக எடுத்தனர். போட்டியின் ஆட்டநாயகியாக தீப்தி சர்மா தெரிவானார். (3)

## விற்பனைக்கு வந்த ஆர்.சி.பி அணி போட்டி போடும் நிறுவனங்கள்



ஐபிஎல் தொடரில் அதிக ரசிகர்கள் வைத்துள்ள அணிகளில் ஒன்றாக றோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு (RCB) அணி விளங்கி வருகிறது.

2008 ஆம் ஆண்டு முதல் ஐபிஎல் தொடர் நடைபெற்று வரும் நிலையில், 18 வருடங்களில் முதல் முறையாக 2025 ஐ.பி.எல் தொடரில் கிண்ணத்தை வென்றது.

இதன் காரணமாக, அணியின் சந்தை மதிப்பு 2 பில்லியன் டொலராக உயர்ந்துள்ளதாக கூறப்படுகிறது.

இந்நிலையில், ஐ.பி.எல் முன்னாள் ஆணையர் லலித் மோடி, றோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணி விற்பனைக்கு வர உள்ளதாக தெரிவித்துள்ளார்.

2008 ஆம் ஆண்டில் விஜய் மல்லையாவின் யுனைடெட் ஸ்பிரிட்ஸ் நிறுவனம் றோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணியை 111.60 மில்லியன் டொலருக்கு வாங்கியது.

இதனையடுத்து 2016 ஆம் ஆண்டில், லண்டனை சேர்ந்த Diageo நிறுவனம், யுனைடெட் ஸ்பிரிட்ஸ் நிறுவனத்தை வாங்கிய தன் மூலம், தற்போது றோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணியின் உரிமையாளராக உள்ளது.

இந்நிலையில், றோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணியை வாங்க இந்தியாவின் புனேவை தளமாக கொண்டு இயங்கி வரும் சீரம் நிறுவனத்தின் நிறுவன CEO அதார் பூனாவாலா பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக தகவல் வெளியாகியுள்ளது. (3)

## ஆசியக்கிண்ணம்; காலக்கெடு விதித்த பி.சி.சி.ஐ



ஆசியக் கிண்ணத்தை இந்திய அணிக்கு தராத நிலையில், பி.சி.சி.ஐ அதிரடி நடவடிக்கைக்கு தயாராகி வருகிறது.

2025 ஆசியக் கிண்ண இறுதிப் போட்டியில், இந்திய அணி பாகிஸ்தானை 5 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றது.

ஆனால், கிண்ணத்தை ஆசியக் கவுன்சில் தலைவர் மொஹ்சின் நக்வியிடமிருந்து பெற மாட்டேன் என இந்திய அணித்தலைவர் சூர்யகுமார் யாதவ் உறுதியாக இருந்தார்.

அதேபோல், ஆசியக் கிண்ணத்தை நான் தான் வழங்குவேன் என நக்வியும் உறுதியாக இருந்ததால், கிண்ணம் இல்லாமலே இந்திய அணி வெற்றியை கொண்டாடியது.

கிண்ணத்தை தன்னுடன் எடுத்து சென்ற நக்விக்கு, பி.சி.சி.ஐ கடும் கண்டனம் தெரிவித்திருந்தது.

இதனையடுத்து, மீண்டும் ஒரு விழா நடத்தினால் அதில் கிண் ணத்தை வழங்கத் தயார் என நக்வி நிபந்தனை விதித்திருந்தார்.

இந்நிலையில், கிண்ணத்தை இந்திய அணியிடம் வழங்க பி.சி.சி.ஐ 72 மணி நேரம் கெடு விதித்திருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

அவ்வாறு கிண்ணத்தை வழங்காமல் பாகிஸ்தானுக்கு கொண்டு செல்ல முயற்சித்தால், டுபாய் காவல்துறையில் கிண்ணத்தை திருடி செல்வதாக புகார் அளிக்க பி.சி.சி.ஐ திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. (3)

## லீக் போட்டிகளில் பங்கேற்க பாக்.வீரர்களுக்குத் தடை

வெளிநாடுகளில் நடக்கும் 20 ஓவர் லீக் கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்க பாகிஸ்தான் வீரர்களுக்கு வழங்கிய தடையில்லா சான்றிதழை பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் ரத்து செய்து அதிரடி நடவடிக்கை எடுத்துள்ளது.

ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் இறுதிப்போட்டியில் இந்தியாவுக்கு எதிராக தோற்றதை தொடர்ந்து, உள்ளூர் போட்டியில் வீரர்கள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்பதற்காக இந்த முடிவு எடுக்கப்பட்டு இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளன.மறுஉத்தரவு வரும்வரை இந்த தடை நீடிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. பாபர் அசாம், முகமது ரிஸ்வான், ஷகீன் ஷா அப்ரிடி உட்பட 7 பாகிஸ்தான் வீரர்கள் டிசம்பரில் அவுஸ்திரேலியாவில் தொடங்கும் பிக் பாஷ் போட்டியில் விளையாட இருந்தனர்.

அத்துடன் ஐக்கிய அரபு அமீரகத்தில் நேற்று நடைபெற இருந்த சர்வதேச லீக் 20 ஓவர் போட்டிக்கான ஏலத்தில் 16 பாகிஸ்தான் வீரர்களின் பெயர் இடம் பற்றிருந்தது. தற்போதைய உத்தரவால் அதில் அவர்கள் விளையாட முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுகைகளுக்கான அறிவித்தல்

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம்

# வைத்தியசாலைகளுக்கு அழுக்குத் துணிகள் சலவைச் சேவையினை வழங்குவதற்கான பெறுகை 2025/2026

தலைவர், பிராந்திய பெறுகைக் குழு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் கீழுள்ள வைத்தியசாலைகளுக்கு அழுக்குத் துணிகள் சலவைச் சேவையினை வழங்குவதற்குத் தகைமையுள்ள விலை மனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுப் பத்திரங்களினை கோருகின்றார்.

| தொ. இல | பெறுகை இலக்கம் | பெறுகையின் தன்மை | சேவை வழங்க வேண்டிய நிலையம் | கேள்வி உத்தரவாத முறி |
|---|---|---|---|---|
| 01 | H/LS/2025 - 2026 01தொடக்கம் 10வரை | அழுக்குத்துணிகள் சலவைச் சேவை | (அ) பருத்தித்துறை பிரதேசத்திற்குட்பட்ட ஆதார வைத்தியசாலை, சத்திர சிகிச்சை கூடம் , பிரதேச வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார பராமரிப்பு நிலையங்கள் (PMCU) | 10,000.00 |
| | | | (ஆ)தெல்லிப்பளை பிரதேசத்திற்குட்பட்ட ஆதார வைத்தியசாலை, சத்திர சிகிச்சை கூடம் , பிரதேச வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார பராமரிப்பு நிலையங்கள் (PMCU) | 10,000.00 |
| | | | (இ).சாவகச்சேரி . ஊர்காவற்றுறை, கோப்பாய், சங்கானை, சண்டிலிப்பாய், வேலணை, நல்லூர், யாழ்ப்பாணம் மற்றும் உடுவில் பிரதேசத்திற்குட்பட்ட ஆதார வைத்தியசாலை, பிரதேச வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார பராமரிப்பு நிலையங்கள் (PMCU) | 3000.00 |

01. பெறுகை கோரலானது தேசிய போட்டி விலை பெறுகை முறைப்படி தனித்தனியாக மேற்கொள்ளப்படும்.
02. ஒப்பந்த அளிப்பு செய்வதற்கு, வெற்றிகரமான விலை மனுதாரர் கறுப்புப் பட்டியலில் இடம்பெறலாகாது என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.
    - அ. விலைமனுதாரர் வலிதான வியாபாரப் பெயர் பதிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
    - ஆ. அத்துடன் தொடர்புடைய வழங்கல் சேவையினை வழங்குவதற்கான அனுமதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.
    - இ. அத்துடன், வடக்கு மாகாணத்தில் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அல்லது கிளையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
03. ஒப்பந்த அளிப்பிற்குத் தகைமை பெறுவதற்கு விலை மனுதாரர்கள் பகுதி 2 -பெறுகைத் தரவில் குறிப்பிடப்பட்ட ஆகக் குறைந்த அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
04. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை **பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, சுகாதாரக் கிராமம், பண்ணை யாழ்ப்பாணம்** எனும் முகவரியிலும் 0212223725,0212226253,0212214966 எனும் தொலைபேசி இலக்கங்களினூடாகவும் பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் பெறுகை ஆவணங்களை இவ் முகவரியில் வேலை நாட்களில் 09:00 மணி தொடக்கம் 15:00 மணிவரை பரிசீலிக்க முடியும்.
05. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியில் அமைந்த கேள்வி ஆவணங்களை **பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, சுகாதாரக் கிராமம், பண்ணை யாழ்ப்பாணம்** எனும் முகவரியில் **02 ஒக்டோபர் 2025 ஆம் திகதி தொடக்கம் 14.10.2025** ஆம் திகதி வரை 09:00 மணிதொடக்கம் 15:00 மணிவரையான காலப்பகுதியில் எழுத்து மூலமான கோரிக்கையுடன் காசாக மீளளிக்கப்படாத வைப்பாகச் ரூபா 1,000.00 அலுவலக காசாளரிடம் செலுத்தி அப்பற்றுச் சீட்டினை சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளலாம்.
06. பெறுகை ஆவணங்கள் **15 ஆம் திகதி ஒக்டோபர் 2025** அன்று காலை 10.00 மணிக்கு முன்பதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம் என்ற முகவரியில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விலைமனுக்கள் அனைத்தும் பெறுகை நேர முடிவில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும் என்பதுடன் தாமதமான பெறுகைகள் நிராகரிக்கப்படும்.
07. பெறுகைக்கு முன்னரான கூட்டமொன்று திணைக்களத் தலைவரின் கீழ் குறிப்பிட்டுள்ள அமைவிடத்தில் **10 ஆம் திகதி ஒக்டோபர் 2025** ஆம் திகதி காலை **10.00** மணிக்கு நடைபெறும்.
08. மேற்குறிப்பிட்ட பெறுகைப் பிணைப்பணம் ஒவ்வொரு பெறுகைக்கும் தனித்தனியாக செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன் இப்பிணைப்பணம் அலுவலக காசாளரிடம் அல்லது வங்கியில் செலுத்தி அவ்வாவணத்தினை கேள்வி ஆவணத்துடன் இணைத்தல் வேண்டும்.
09. இவ்விலைமனுக்கோரலை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல்லது எந்தவொரு நிலையிலுமோ இப்பூரண நடவடிக்கையிலிருந்தோ எவருக்கும் நட்டஈடு எதுவும் செலுத்தாமலே இவ்விலைமனு கோரலை ரத்து செய்வதற்கு பெறுகைக்குழு தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.

**வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்,**
**தலைவர், பிராந்திய பெறுகைக் குழு**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம்**
**021-222-3725, 021-222-6253, 021-221-4966 தொலைநகல்: 021-222-9971**
**மின்னஞ்சல்: rdhsjaffna 15@gmail .com**


# நாடு திரும்பினார் ஜனாதிபதி



(கொழும்பு)

நியூயோர்க் மற்றும் ஜப்பானுக்கு உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க, நேற்றுக் காலை கட்டுநாயக்க விமான நிலையத்தினூடாக நாட்டை வந்தடைந்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் 80 ஆவது பொதுச் சபைக் கூட்டத்தொடரில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி கடந்த செப்ரெம்பர் 22 ஆம் திகதி நாட்டை விட்டுப் புறப்பட்டார்.

அதைத் தொடர்ந்து, ஜப்பானிய அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் ஜனாதிபதி, செப்ரெம்பர் 27 ஆம் திகதி காலை ஜப்பானுக்கு பயணம் மேற்கொண்டார்.

இந்த விஜயத்தில் ஜனாதிபதியுடன், வெளிவிவகார, வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் வெளிவிகார அமைச்சின் மூத்த அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (நி)

# பேருந்து-மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதி விபத்து

## இருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

ஹொரவ்பொத்தானை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கபுகொல்லாவ வீதியில் பஹலாவ சந்திக்கு அருகில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்தொன்றில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

ஹொரவ்பொத்தானையில் இருந்து கபுகொல்லாவ நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் எதிர் திசையில் வந்த பேருந்துடன் மோதியே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் ஹொரோவ்பொத்தானை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்கள் 20 மற்றும் 21 வயதுடைய ஹொரோவ்பொத்தானை பகுதியைச் சேர்ந்தவர்கள் ஆவர். அவர்களது சடலங்கள் ஹொரோவ்பொத்தானை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்துடன் தொடர்புடைய பேருந்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பில் ஹொரோவ்பொத்தானை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி)

# ஜப்பானின் பேரரசர் நருஹிதோவை சந்தித்தார் ஜனாதிபதி அநுரகுமார



(டோக்கியோ)

ஜப்பான் அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் அங்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க நேற்று முன்தினம் பேரரசர் மாளிகையில் ஜப்பானின் பேரரசர் நருஹி தோவை சந்தித்தார்.

டோக்கியோவில் உள்ள ஜப்பான் பேரரசரின் உத்தியோகபூர்வ இல்லமான பேரரசர் மாளிகைக்கு வருகை தந்த ஜனாதிபதியை, பேரரசர் அமோகமாக வரவேற்றதுடன், சுமூகமான கலந்துரையாடலிலும் ஈடுபட்டார்.

வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சர் விஜித ஹேரத்தும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





யாழ். வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா நேற்று புதன்கிழமை பத்திபூர்வமாக இடம்பெற்றது.
(படம்: சிவசாந்தன்)

# வெள்ள வாய்க்காலை புனரமைத்து தாருங்கள்

## பொதுமக்கள் கோரிக்கை

(சாவகச்சேரி)

**வெள்ள வாய்க்காலை புனரமைத்துத் தருமாறு வரணி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட வரணி வடக்கு மதவடி வாய்க்கால் நீண்ட காலமாக எந்த விதமான புனரமைப்பும் இன்றிக் காணப்படுவதனால் அப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அப்பகுதி மக்கள் கருத்துத் தெரிவிக்கையில், மேற்படி வாய்க்காலானது கறுக்காய் இராவில் குளத்தில் இருந்து புலோலி பருத்தித்துறையை ஊடறுத்து வயல் வெளிக்குச் செல்கின்றது.

வரணி வடக்கு பகுதியில் இவ் வாய்க்காலின் இருமருங்கும் குடிமனைகள் காணப்படுகின்றன.

நீண்ட காலமாக வாய்க்கால் புனரமைக்கப்படாமையால் சேறும் சகதியுமாக மேற்படி வாய்க்கால் காணப்படுகின்றது.

வாய்காலை மக்கள் வீதியாக பயன்படுத்தி வருவதனால் பெரும் இடர்பாடுகளைச் சந்திக்கின்றனர்.

குறிப்பாக பாடசாலை மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் .

எனவே மேற்படி வாய்க்காலை நீர் வடிந்தோடக்கூடியவாறும் அதே நேரம் மக்கள் வீதியாக பயன்படுத்தக்கூடியவாறும் கொங்கிறீட் அல்லது தார் இட்டு அமைத்துத் தருமாறு கோரிக்கை விடுக்கின்றோம் என தெரிவித்தனர்.

இது தொடர்பாக கடந்த காலங்களில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்தும் இன்று வரை தீர்வு எட்டப்படவில்லை எனவும் மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். (8-30)

# 'சித்திர முத்திரைகள்' ஓவிய கைவினைப் பொருட்களின் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியின் ஏற்பாட்டில் "சித்திர முத்திரைகள்" என்னும் ஓவிய, கைவினைப் பொருட்களின் கண்காட்சி நாளை 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் 6 ஆம் திகதி திங்கட்கிழமை வரை தினமும் காலை 9 மணி முதல் மாலை 4 மணிவரை இல.128, டேவிற் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது அழகியல் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கலைத்தூது அழகியல் கல்லூரியில் சித்திரப் பாடத்தையும் ஏனைய நுண்கலை பாடங்களையும் பயில்கின்ற மாணவர்களது ஆற்றல்களை வெளிக்கொணரும் முகமாக ஏற்பாடு செய்யப்பட்டு கடந்த பல வருடங்களாக நடத்தப்பட்டு வருகின்ற இக்கண்காட்சி இம்முறையுடன் ஒன்பதாவது தடவையாக இடம்பெறுகின்றது.

இக்கண்காட்சியில் அயல் பாடசாலைகளில் சித்திர பாடத்தைப் பயில்கின்ற மாணவர்களது ஓவிய, கைவினைப் பொருட்களும் இணைத்துக் கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

"சித்திர முத்திரைகள்" கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வு நாளை காலை 9.30 மணிக்கு இடம்பெறும்.

இதன்போது வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு .நாகரத்தினம் ராஜன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கண்காட்சியை ஆரம்பித்து வைக்கவுள்ளார். (8)

# பொது இடங்களில் கழிவுகளைக் கொட்டுபவர்களைக் கண்காணிக்க சோலர் கமரா

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பொது இடங்களில் அறிவுறுத்தல்களை மீறி கழிவுகளைக் கொட்டுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக சோலர் கமரா பூட்டுவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் சாவகச்சேரிப் பிரதேசசபையில் இட பெற்ற அமர்வின் போதே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பராமரிப்பற்ற தனியார் காணிகளுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நடவடிக்கைகள் வட்டார உறுப்பினர்களின் கண்காணிப்பில் இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (8-30)

# யாழ்.மாவட் பண்பாட்டுப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட் பண்பாட்டு பேரவையும் வட்ட செயலகமும், இணை வட மாகாண பண்பாட்டு லுவல்கள் அலகின் அனுசரணையுடன் நடாத்தும் பண்பாட்டு பெருவிழா யாழ்.மாவட்ட செயலகத்தில் நாளை வெள்ளிக்கிழமை மதியம் 1 மணியளவில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ் . மாவட்ட செயலக முன்னாள் செயலர் இமல்டா சுகுமார் கலந்து கொள்ளவுள்ளார்.

பண்பாட்டு ஊர்வலத்துடன் நிகழ்வு ஆரம்பமாகி தொடர்ந்து அரங்க நிகழ்வுகள் இடம் பெறும். அத்துடன் "யாழ்ப்பாணம்" நூல் வெளியீடும் நடைபெறவுள்ளது. (8-33)

# அதி ருத்ர மஹா சாதனா நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

பகவான் ஸ்ரீ சத்ய சேவா நிலையத்தின் அதி ருத்ர மஹா சாதனா நிகழ்வுகள் எதிர்வரும் சனி (4) மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் யாழ்ப்பாணம், திருநெல்வேலி சேர்.பொன் இராமநாதன் வீதியில் அமைந்துள்ள பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

சனிக்கிழமை நடைபெறவுள்ள அதி ருத்ர மஹா சாதனா நிகழ்வில் காலை அமர்வு முற்பகல் 7 மணிமுதல் பிற்பகல் 1.50 மணிவரையும் மாலை அமர்வு பிற்பகல் 3.30 மணி முதல் 8.20 மணிவரையும் இடம்பெறவுள்ளது. அத்துடன் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 6 மணி முதல் பிற்பகல் 12.50 மணிவரை இடம்பெறவுள்ள தென ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலைய செயலாளர் ஆர்.தியாகராஜா அறிவித்துள்ளார். (3)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 240 | 200 | 350 | 180 | 240 |
| உருளைக்கிழங்கு | 200 | 220 | 200 | 180 | 240 |
| பச்சைமிளகாய் | 160 | 200 | 200 | 200 | 240 |
| தக்காளி | 200 | 250 | 250 | 200 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 220 | 300 | 250 | 200 |
| கோவா | 180 | 160 | 200 | 150 | 200 |
| கரட் | 200 | 250 | 300 | 250 | 300 |
| பூசணி | 60 | 60 | 100 | 40 | 60 |
| புடோல் | 100 | 200 | 150 | 150 | 300 |
| வாழைக்காய் | 120 | 100 | 100 | 100 | 150 |
| சின்ன வெங்காயம் | 250 | 180-250 | 300 | 250 | 300 |
| பெரிய வெங்காயம் | 160 | 180 | 150 | 140 | 160 |
| பாகற்காய் | 400 | 500 | 400 | 450 | 600 |
| வெண்டக்காய் | 250 | 250 | 100 | 200 | 250 |
| கருணைக் கிழங்கு | 300 | 320 | 250 | 250 | 350 |
| பயற்றங்காய் | 150 | 200 | 150 | 250 | 200 |
| லீக்ஸ் | 200 | 200 | 250 | 200 | 200 |
| பீற்றூட் | 150 | 120 | 150 | 100 | 150 |
| கறிமிளகாய் | 350 | 350 | 300 | 350 | 300 |
| முருங்கைக்காய் | 350 | 350 | 300 | 200 | 200 |
| போஞ்சி | 400 | 500 | 600 | 400 | 500 |
| கத்தரிதம்புள்ள | 200 | 160 | 300 | -- | 200 |
| கீரை - 1 பிடி | 120 | 60-160 | 150 | 80 | 120 |
| தேசிக்காய் | 1200 | 1200 | 1000 | 1100 | 2000 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 200 | 150 | 150-230 | 160-220 |
| இராசவள்ளி | 600 | 1000 | 1000 | 800 | 1000 |
| வெங்காயப்பூ | 350 | 300 | 400 | 250 | 320 |
| முள்ளங்கி | 120 | 160 | 150 | 150 | 160 |
| பொன்னாங்காணி | 100 | 80 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 60 | 80 | 80 | 100 |
| ஈரப்பலா | 150 | 150 | 100 | 100 | 250 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் (வ.து)
# கனகபுரம், கிளிநொச்சி.
## பதிவு இல- PA/ 46 of 8.2.1971

### பதவிவெற்றிடங்களுக்கான விண்ணப்பம் கோரல் (வெளிவாரி)

எமது சங்கத்தில் வெற்றிடமாக உள்ள பின்வரும் பதவிகளுக்கு தகுதியானவர்களிடமிருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது. விண்ணப்பபடிவத்தினை சங்க வேலை நாட்களில் தலை மைக்காரியா லயத்தில் பெற்றுக் கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் தலைவர், கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்கம்(வ.து), கனகபுரம், கிளிநொச்சி. எனும் முகவரிக்கு 15.10.2025ஆம் திகதிக்கு முன்னர் நேரில் அல்லது பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கவேண்டும்.

01. **பதவி** - விற்பனை உதவியாளர் - 308/15
சம்பளஅளவுத்திட்டம் - 32435-460X10-520X10-680X10-49035
389220-5520X10-6240X10-8160X10-409140
வெற்றிடங்கள் - 06
தகைமைகள் :-
அ) கூட்டுறவு ஊழியர் 16ஆவது சம்பளத் திட்ட பதவியில் விற்பனை உதவியாளர்/எரிபொருள் நிரப்புநர் பதவியில் ஆகக் குறைந்தது 02 ஆண்டுகால அனுபவம்./
கூட்டுறவு ஊழியர் 17ஆவது சம்பளத்திட்டப் பதவியில் விற்பனை உதவியாளர் பதவியில் ஆகக்குறைந்தது 04 ஆண்டுகால அனுபவம்.

அல்லது

ஆ) கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப் பத்திர பரீட்சையில் சித்தி./
க.பொ.த.சாதாரண தரப்பத்திர பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம் / தமிழ்மொழி, கணிதம் என்பவற்றை உள்ளடக்கி 06 பாடங்களுடனான சித்தி.

02. **பதவி** - விற்பனை உதவியாளர் - 308/17
சம்பளஅளவுத்திட்டம் - 31515-360X10-450X10-500X10-44615
378180-4320X10-5400X10-6000X10-393900
வெற்றிடங்கள் - 01
தகைமைகள்:-
அ) கூட்டுறவு ஊழியர் கனிஷ்டதர தராதரப்பத்திரம்./
08ஆம் தர கல்விச்சான்றிதழ்.

03. **பதவி** - சாரதி - 312/15
சம்பளஅளவுத்திட்டம் -32435-460X10-520X10-680X10-49035
389220-5520X10-6240X10-8160X10-409140
வெற்றிடங்கள் - 01
தகைமைகள்:-
அ) 05ஆம் தர கல்விச்சான்றிதழுடன் மோட்டார் கார் சாரதி அனுமதி பத்திரத்துடன் ஆகக் குறைந்தது 01 ஆண்டுகால அனுபவம்.

04. **பதவி** -எரிபொருள் நிரப்புனர் - 313/16
சம்பளஅளவுத்திட்டம் -31975-390X10-490X10-650X10-47275
383700-4680X10-5880X10-7800X10-402060
வெற்றிடங்கள் -02
தகைமைகள்:-
அ)கூட்டுறவு ஊழியர் 17ஆவது சம்பளத்திட்டப் பதவியில் ஆகக்குறைந்தது 01 ஆண்டுகால அனுபவம்.

அல்லது

ஆ)கூட்டுறவு ஊழியர் கனிஷ்ட தராதரப்பத்திரம் / 08ஆம் தர கல்விச்சான்றிதழ்

05. **பதவி** -வாகன சுத்திகரிப்பாளர் - 314/16
சம்பளஅளவுத்திட்டம் -31975-390X10-490X10-650X10-47275
383700-4680X10-5880X10-7800X10-402060
வெற்றிடங்கள் -01
தகைமைகள்:-
அ)கூட்டுறவு ஊழியர் 17ஆவது சம்பளத்திட்டப் பதவியில் ஆகக்குறைந்தது 01 ஆண்டுகால அனுபவம்.

அல்லது

ஆ)05ஆம் தர கல்விச்சான்றிதழுடன் சிறந்த தேகாரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

06. **பதவி** -காவலாளி - 315/16
சம்பளஅளவுத்திட்டம் -31975-390X10-490X10-650X10-47275
383700-4680X10-5880X10-7800X10-402060
வெற்றிடங்கள் -01
தகைமைகள்:-
அ) கூட்டுறவு ஊழியர் 17ஆவது சம்பளத்திட்டப் பதவியில் ஆகக்குறைந்தது 01 ஆண்டுகால அனுபவம்.

அல்லது

ஆ) 05ஆம் தர கல்விச்சான்றிதழுடன் சிறந்த தேகாரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

07. **பதவி** - களஞ்சிய முகாமையாளர் - 208/16
சம்பளஅளவுத்திட்டம் -31975-390X10-490X10-650X10-47275
383700-4680X10-5880X10-7800X10-402060
வெற்றிடங்கள் -05
தகைமைகள்:-
அ) கூட்டுறவு ஊழியர் 17ஆவது சம்பளத்திட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் ஆகக்குறைந்தது 02 ஆண்டுகால அனுபவம்.

அல்லது

ஆ) கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப் பத்திர பரீட்சையில் சித்தி./
க.பொ.த.சாதாரண தரப்பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம் / தமிழ்மொழி, கணிதம் உட்பட 06 பாடங்களுடனான சித்தி.

08. **பதவி** - காவலாளி - 315/17
சம்பளஅளவுத்திட்டம் - 31515-360X10-450X10-500X10-44615
378180-4320X10-5400X10-6000X10-393900
வெற்றிடங்கள் - 01
தகைமைகள்:-
அ) 05ஆம் தர கல்விச்சான்றிதழுடன் சிறந்த தேகாரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

ஏனைய விபரங்கள்

- ➢ வயதெல்லை 18-45 (சங்க பணியாளருக்கு இவ் வயதெல்லை பொருந்தாது.)
- ➢ **விண்ணப்ப முடிவுத்திகதி - 15.10.2025 புதன்கிழமை**
- ➢ இப்பதவிகளுக்குரிய அடிப்படை சம்பளத்திற்கு மேலதிகமாக கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்றுநிருபங்களுக்கு அமைய இதரபடிகளும் காலத்திற்கு காலம் அங்கீகரிக்கப்படும் கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.
- ➢ குறித்த பதவிக்கு தெரிவுசெய்யப்படும் விண்ணபதாரிகள் சங்கத்தினால் கோரப்படும் பிணையினை செலுத்துதல் வேண்டும்.
- ➢ சங்க எல்லைப்பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- ➢ சங்கத்தினால் தயாரிக்கப்பட்ட மாதிரி படிவத்தினை பெற்று பூரணப்படுத்தி கல்வித்தகைமை சான்றிதழ், சேவை தகைமை சான்றிதழ், வதிவிட உறுதிப்படுத்தல் சான்றிதழ் மற்றும் ஏனைய சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை இணைத்து தலைவர், கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்கம்(வ.து), கனகபுரம், கிளிநொச்சி. எனும் முகவரிக்கு நேரிலோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ 15.10.2025ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்ககூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும். ஏற்கனவே கூட்டுறவுச்சங்கம் ஒன்றில் கடமையாற்றும் ஊழியர்கள் அச்சங்கத்தினூடாகவே விண்ணப்பித்தல் வேண்டும்.

**திரு.சு.யதீஸ்வரன்,
தலைவர்,கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்கம்(வ.து),
கிளிநொச்சி.**

(C-4002)

## வேலணை ப.நோ.கூ. சங்கத்தின்
## வர்த்தகக்கிளை வங்களாவடியில்
# திறந்து வைக்கப்பட்டது



(அராலி)

வேலணை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் வர்த்தகக் கிளை (கோப் சிற்றி) நேற்று வங்களாவடி சந்தியில் அமைந்துள்ள சங்கத்தின் தலைமைக் கட்டடத் தொகுதியில் யாழ் மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கி.சந்திரசேகரனால் நாடாவெட்டி சம்பிரதாயபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

வேலணை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் த.தர்மராஜேந்திரன் தலைமையில் கூட்டுறவுச் சங்கத்தின் நிர்வாகிகள் பணியாளர்களது பிரசன்னத்துடன் குறித்த நிகழ்வு இடம்பெற்றது.நீண்டகாலமாக தேவையான பொருட்களை வேலணை நுகர்வோருக்கு குறைந்த விலையில் நம்பகத் தன்மையுடன் வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டுவந்த நிலையில் தற்போது நவீன வசதிகளுடன் குறித்த வர்த்தகக் கிளை திறந்துவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (8-104)

## சாவகச்சேரி பிரதேச செயலகத்திற்கு புதிய உதவிப் பிரதேச செயலாளர் நியமனம்

(யாழ்ப்பாணம்)



சாவகச்சேரி உதவிப் பிர தேச செயலாளராக நியமிக் கப்பட்ட திருமதி லாகினி நிருபராஜ் நேற்றைய தினம் அரசாங்க அதிபர் மருத் லிங்கம் பிரதீபனிடம் தமக் கான நியமனக் கடிதத்தினைப் பெற்றுக்கொண்டார்.

மேலும் அன்றைய தினமே தனது கடமையினை பொறுப்பேற்றார் என்பது குறிப் பிடத்தக்கது. (8-33)

# பேருந்து கட்டணங்களில் மாற்றமில்லை

(கொழும்பு)

எரிபொருள் விலையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், பேருந்து கட்டணங்களில் எந்த திருத்தமும் மேற் கொள்ளப் படவில்லை என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.எரிபொருள் விலைகள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நள்ளிரவு முதல் குறைக்கப்பட்டுள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்திருந்தது.

இதன்படி, 95 ஒக்டேன் பெற்றோல் லீட்டருக்கு ரூ.6 குறைக் கப்படவுள்ளதுடன், அதன் புதிய விலை ரூ.335 என நிர்ணயிக் கப்பட்டுள்ளது. ஆனால் 92 ஆக்டேன் பெற்றோல் விலையில் மாற்றமில்லை.

அதேபோல், லங்கா ஆட்டோ டீசல் விலை லிட்டருக்கு ரூ.6 குறைக்கப்படவுள்ளதுடன், அதன் புதிய விலை ரூ.277 ஆகும். சூப்பர் டீசல் விலையில் மாற்றமின்றி தொடர்கிறது. (நி)

# துஷ்பிரயோகக் குற்றவாளிக்கு 10 ஆண்டுகள் கடூழிய சிறை!

(கண்டாவளை)

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கடந்த 2015 ஆம் ஆண்டு பதினான்கு வயது சிறுமி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய குற்றவாளிக்கு நீதிமன்றம் பத்து ஆண்டு கால கடூழிய சிறைத் தண்டனை விதித்துள்ளது.

கடந்த 2015 ஆம் ஆண்டு 14 வயது நிரம்பிய சிறுமி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கியமை தொடர்பில் கிளிநொச்சி பொலிஸாரால் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு சட்டமா அதிபர் திணைக்க ளத்தினால் குறித்த வழக்கு கிளிநொச்சி மேல் நீதிமன்றத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த வழக்கானது நேற்று முன்தினம் கிளிநொச்சி மேல் நீதிமன்றத்தில் தீர்ப்புக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது இச் சம்பவத்துடன் தொடர்புபட்ட குற்றவாளிக்கு பத்து ஆண்டுகால கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது டன் ஐயாயிரம் ரூபாய் தண்டப்பணமும் விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு ஐந்து லட்சம் ரூபாய் இழப்பீடு செலுத்துமாறு நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது. (8-315)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## பாடசாலைக் கட்டடம் இடிந்து விழுந்ததில் இடிபாடுகளுக்குள் சிக்கிய மாணவர்கள்

- மூவர் உயிரிழப்பு
- மீட்புப் பணிகள் தீவிரம்

(ஜகார்த்தா)

இந்தோனேஷியாவில் பள்ளி கட்டடம் இடிந்து விழுந்த விபத்தில், மூன்று மாணவர்கள் உயிரிழந்தனர். இடிபாடுகளில் சிக்கிய, 100இற்கும் மேற்பட்ட மாணவர்களை மீட்கும் பணி தீவிரமாக நடந்து வருகிறது.

தென்கிழக்கு ஆசிய நாடான இந்தோனேஷியாவின் கிழக்கு ஜாவா நகரமான சிடோர்ஜோவில் முஸ்லிம் பள்ளி ஒன்று செயற்பட்டு வருகிறது.

அங்கு கட்டுமானப் பணி நடைபெற்று வந்த ஒரு கட்டடத்தில் மாணவர்கள் நேற்று முன்தினம் மதிய தொழுகை நடத்திக்கொண்டிருந்தனர்.

அப்போது கட்டடம் திடீரென இடிந்து மாணவர்கள் மீது விழுந்தது. இதில் ஒரு மாணவன் உயிரிழந்தார். ஏராளமானோர் காயமடைந்தனர் இடிபாடுகளில், 100 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் சிக்கி உள்ளனர். பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் ஆண்கள். ஏனெனில் கட்டடத்தின் மற்றொரு பகுதியில் மாணவியர் தனியாக பிரார்த்தனை செய்து கொண்டிருந்தனர்.

கட்டடம் இடிந்து விழுந்ததற்கான காரணம் குறித்து அதிகாரிகள் விசாரணையைத் தொடங்கினர்.

பெரும்பாலும் 12 முதல் 17 வயதுக்குட்பட்ட 7 முதல் 11ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களே இடிபாடுகளில் சிக்கியுள்ளனர். (நி)




## போர் நிறுத்தம் தொடர்பில்
## பதிலளிக்க காசாவுக்கு கால அவகாசம்



(வோஷிங்டன்)

இஸ்ரேல் உடனான போர் நிறுத்தம் தொடர்பான இருபது அம்ச பரிந்துரைகளுக்கு பதிலளிக்க காசாவுக்கு மூன்று தொடக்கம் நான்கு நாட்களை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அவகாசமாக அளித்துள்ளார்.

இந்த நிலையில் போர் நிறுத்த ஒப்பந்தம், ஹமாஸின் ஆயுதக் குறைப்பு மற்றும் ஹமாஸ் தரப்பிலுள்ள பிணைக் கைதிகளை விடுவிப்பது போன்றவற்றிற்கு ஹமாஸ் ஒப்புக்கொண்டால் காசாவிலுள்ள இஸ்ரேல் வீரர்கள் படிப்படியாக திரும்பப் பெறப்படுவார்கள் எனப் பரிந்துரைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேல் மற்றும் காசா இடையே இரு ஆண்டுகளுக்கும் மேலாக நடைபெற்றுவரும் போரை முடிவுக்கு கொண்டுவருவதற்கான முயற்சிகளில் அமெரிக்கா ஈடுபட்டு வருகின்றது.

உலக நாடுகளிடையே நடைபெற்ற ஏழு போரை நிறுத்தியுள்ளதாக தெரிவிக்கும் டொனால்ட் ட்ரம்ப், தற்போது இஸ்ரேல் மற்றும் காசா போரை நிறுத்துவதற்கான முயற்சியாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவை சந்தித்துள்ளார்.

இந்த சந்திப்பின் மூலம் சாதகமான முடிவு எட்டப்பட்டுள்ளதாக வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.



காசா போர் நிறுத்தத்துக்காக டொனால்ட் ட்ரம்பால் முன்மொழியப்பட்ட முக்கியமான இருபது நிபந்தனைகள் அடங்கிய திட்டத்தை இஸ்ரேல் ஏற்றுக்கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே ஹமாஸிற்கும் இது தொடர்பாக பதிலளிக்க மூன்று தொடக்கம் நான்கு நாட்களை டொனால்ட் ட்ரம்ப் அவகாசமாக அளித்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் டொனால்ட் ட்ரம்ப் மேலும் தெரிவிக்கையில், "போர் நிறுத்த பரிந்துரைகள் தொடர்பாக ஆலோசித்து பதிலளிக்க ஹமாஸுக்கு மூன்று தொடக்கம் நான்கு நாட்கள் அவகாசம் அளிக்கிறேன்.

இந்த விவகாரத்தில் தொடர்புடைய மற்ற தரப்பினரும் பரிந்துரைகளுக்கு ஒப்புதல் தெரிவித்ததால் ஹமாஸின் பதிலுக்காக அவர்கள் காத்திருக்கின்றனர்.

அரபு நாடுகள் கூட இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளதுடன் முஸ்லிம் நாடுகளும் கையெழுத்திட்டுள்ளன.

ஹமாஸ் அமைப்பின் பதிலுக்காக காத்திருக்கின்றோம் அத்தோடு ஹமாஸ் இதற்கு ஒப்புதல் தெரிவிக்கலாம் அல்லது மறுக்கலாம்.

அப்படி மறுத்தால் இதன் முடிவு மிகவும் சோகமானதாக இருக்கும்" என அவர் தெரிவித்துள்ளார். (நி)

## நேபாளத்தின் பாரம்பரியத்தின் படி வாழும் தெய்வமாக 2 வயது சிறுமி தேர்வு

(நேபாளம்)

நேபாளத்தில் வாழும் தெய்வமாக ஆர்யதாரா ஷக்யா என்ற 2 வயது சிறுமி தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

நேபாளத்தில், சிறுமியரை இறைவனின் அவதாரமாகக் கருதி வழிபடும் பாரம்பரிய வழக்கம் நடைமுறையில் உள்ளது.

இந்தநிலையில் இது வரைகாலமும் குமாரி என்று அழைக்கப்படும் சிறுமியை, வாழும் தெய்வமாகப் போற்றி வந்தனர்.

அந்த வகையில், 2017இல் தேர்வான குமாரி த்ரிஷ்ணா ஷக்யாவுக்கு தற்போது 11 வயது பூர்த்தியாகியுள்ளதால் அவர் வீட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

இதன்படி, நேபாளத்தின் புதிய வாழும் தெய்வமாக ஆர்யதாரா ஷக்யா என்ற சிறுமி தேர்வு செய்யப்பட்டார்.

இதற்கமைய அவர் பல்லக்கில் சுமந்து செல்லப்பட்டு, மன்னர் அரண்மனையில் தங்க வைக்கப்பட்டதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (நி)



## பிலிப்...
## சக்திவ...

- 69 பே...
- 200 ...
- உயிரிழப்...

(மணிலா) பிலிப்பை... அளவிலான ச... ஏற்பட்டதில் 6... தாக வெளிநா... வெளியிட்டுள்ள...

## மாணவர் போ...
## மடகஸ்காரில் ...




(மடகஸ்கார்)

மடகஸ்காரில் அரசுக்கு எதிராக இளைஞர்கள் முன்னெடுத்த பாரிய போராட்டம் உலகளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ள நிலையில் அந்நாட்டு ஜனாதிபதி ஆண்ட்ரி ரஜோலினா தன் அரசை கலைப்பதாக அறிவித்துள்ளார்.

ஆபிரிக்காவின் தென்கிழக்கு கடற்கரையில் உள்ள ஒரு தீவு நாடான மடகஸ்கார், ஏழ்மையான நாடுகளில் ஒன்றாக காணப்படுகின்றது. இங்கு, கடந்த 2009ஆம் ஆண்டு நடந்த மக்கள் போராட்டங்களால் முன்னாள் ஜனாதிபதி மார்க் ரவலோமனானா பதவி விலகி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாடு

# பைன்ஸை உலுக்கிய வாய்ந்த நிலநடுக்கம்!

## பேர் உயிரிழப்பு
## பேர் காயம்
## ப்பு அதிகரிக்கலாம் என அச்சம்

**லா) ••••••••••• பைன்ஸ் நாட்டில் 6.9 ரிக்டர் சக்திவாய்ந்த நிலநடுக்கம் 69 பேர் உயிரிழந்துள்ள நாட்டு ஊடகங்கள் செய்தி ள்ளன.**

இடிந்து வீழ்ந்த கட்டடங்களுக்குள் சிக்கியுள்ளவர்களை மீட்கும் பணிகள் நடந்து வருவதனால் இறப்பு எண்ணிக்கை உயரக் கூடும் என்றும் அதிகாரிகள் அஞ்சுகின்றனர்.

பிலிப்பைன்ஸின் மத்திய விசாயாஸ் பகுதியில் உள்ள செபு மாகாணத்தில் உள்ள போகோ நகரின் கடற்கரையில் உள்ளூர் நேரப்படி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு 10 மணிக்கு (1400 GMT) முன்னதாக நிலநடுக்கம் ஏற்பட்டது.


இதனால், மின்சாரம் தடைப்பட்டதுடன், 100 ஆண்டுகளுக்கும் மேலான ஒரு தேவாலயம் உட்பட கட்டடங்கள் இடிந்து வீழ்ந்தன. பிலிப்பைன்ஸின் மிகவும் பிரபலமான சுற்றுலாத் தலங்களில் ஒன்றான செபு மாகாணத்தில் 3.4 மில்லியன் மக்கள் வசிக்கின்றனர்.

பிலிப்பைன்ஸ் பசிபிக் "ரிங் ஆஃப் ஃபயர்" பகுதியில் உள்ளது.

அங்கு எரிமலை செயற்பாடு மற்றும் பூகம்பங்கள் பொதுவானவை. ஜனவரியில் நாட்டில் இரண்டு பெரிய நிலநடுக்கங்கள் ஏற்பட்டன.

எனினும், எந்த உயிரிழப்பும் இல்லை.

2023இல், 6.7 ரிக்டர் அளவிலான நிலநடுக்கத்தில் எட்டு பேர் உயிரிழந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி)



## போராட்டத்தின் எதிரொலி
## ல் பாராளுமன்றம் கலைப்பு!



"யங் மலகாசீஸ் டீட்டர்மைன்ட்" கட்சி தலைவரான ஆண்ட்ரி ரஜோலினா ஆட்சிக்கு வந்தார்.

இயற்கை எழில் கொஞ்சும் மடகாஸ்கரில் அடிக்கடி ஏற்படும் மின்வெட்டு, தண்ணீர் பற்றாக்குறை, பல ஆண்டுகளாக நிலவும் பொருளாதார நெருக்கடி ஆகியவற்றால் மக்கள் அடிக்கடி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

தற்போது ஆண்ட்ரி ரஜோலினா அரசுக்கு எதிராக, "ஜென் இசட்" எனப்படும் இளம் தலைமுறையினர், ஒரு வாரமாக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

போராட்டங்கள் முதலில் தலைநகர் அன்டனன ரிவோவில் தொடங்கின்.

பின்னர் நாடு முழுதும் பரவியது. பல்பொருள் அங்காடிகள், வங்கிகளை போராட்டக்காரர்கள் சூறையாடினர்.

இதனால் மாலை முதல் அதிகாலை வரை ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது.

இப் போராட்டங்களின் போது, 22 பேர் கொல்லப்பட்டதாகவும், 100இற்கும் மேற்பட்டோர் காயமடைந்ததாகவும் ஐ.நா தெரிவித்துள்ளது.

போராட்டத்தை ஒடுக்க பாதுகாப்புப் படையினர் அத்துமீறி தாக்குதல் நடத்தியதாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

இந்த நிலையில், அந்நாட்டு ஜனாதிபதி ஆண்ட்ரி ரஜோலினா தன் அரசின் தோல்வியை ஒப்புக்கொண்டு ஆட்சியை கலைப்பதாக அறிவித்துள்ளார்.

"அமைச்சர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணிகளை ஒழுங்காக செய்யவில்லை. நாங்கள் அதை ஒப்புக்கொள்கிறோம்" என்றும் நாட்டு மக்களிடம் அவர் மன்னிப்பு கேட்டுள்ளார். (நி)

## சட்டவிரோதமாக குடியேறிய 400 ஈரானியர்கள் நாடு கடத்தப்படவுள்ளனர்

## அமெரிக்காவில் அதிரடி

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்ற பிறகு, நிர்வாகத்தில் பல்வேறு அதிரடி மாற்றங்கள் செய்யப்பட்டு வருகின்றன. அதன் ஒரு பகுதியாக, சட்டவிரோதமாக குடியேறியவர்களை அவர்களின் சொந்த நாடுகளுக்குத் திருப்பி அனுப்பும் நடவடிக்கை தீவிரமடைந்துள்ளது.


அமெரிக்கக் குடியேற்றத் துறை அதிகாரிகள், வணிக வளாகங்கள் மற்றும் தனியார் நிறுவனாங்களில் அதிரடி சோதனை மேற்கொண்டு, உரிய ஆவணங்கள் இன்றித் தங்கியிருப்பவர்களைக் கைது செய்து அவர்களின் சொந்த நாடுகளுக்குத் திருப்பி அனுப்புகின்றனர்.

இந்த அதிரடி நடவடிக்கையின் ஒரு பகுதியாக, ஈரானைச் சேர்ந்த சுமார் 400 பேர் உரிய ஆவணங்கள் இல்லாமல் அங்குத் தங்கியிருந்தது கண்டறியப்பட்டுள்ளது.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் மட்டும் ஈரானைச் சேர்ந்த 120 பேர் கைது செய்யப்பட்டனர். இதன் மூலம் கைதான ஈரானியர்களின் எண்ணிக்கை 400ஐ தாண்டியுள்ளது.

ட்ரம்ப் நிர்வாகம் இந்த நாடு கடத்தும் நடவடிக்கை குறித்துப் பொதுவில் இது வரை எந்த அறிவிப்பும் வெளியிடவில்லை.

எனினும், அமெரிக்க வரலாற்றிலேயே மிகப்பெரிய நாடு கடத்தும் நடவடிக்கையை மேற்கொள்ளப் போவதாக ட்ரம்ப் உறுதியளித்துள்ள நிலையில், இந்தச் சம்பவம் குடியேறியவர்கள் மற்றும் தஞ்சம்கோருவோர் மீதான பரவலான நடவடிக்கையின் ஒரு பகுதியாக அமைகிறது. (நி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒக்டோபர் மாத இராசி பலன்கள்

## கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள்!



**கிரகநிலை** - தைரிய வீரிய ஸ்தானத்தில் குரு - பஞ்சம ஸ்தானத்தில் சுக்கிரன், கேது - ரண ருண ரோக ஸ்தானத்தில் சூரியன், புதன் - சப்தம ஸ்தானத்தில் செவ்வாய், புதன் - லாப ஸ்தானத்தில் சனி, இராகு என கிரக நிலைகள் உள்ளன.

**பலன்கள்:** இந்த மாதம் பண வரவு இருக்கும். பயணங்கள் செல்ல வேண்டி இருக்கும்.

கொடுத்த வாக்கை காப்பாற்று வீர்கள். வீண் பழி நீங்கும். சில்லறை சண்டைகள் சரியாகும். குடும்பத்தில் அமைதி குறையலாம். நிதானமாக பேசிப் பழகுவது நல்லது.

பொருட்களை பாதுகாப்பாக வைப்பது அவசியம். தொழில் வியாபாரத்தில் திடீர் தடைகள் ஏற்பட்டு நீங்கும். வாடிக்கையாளர்களை திருப்திப்படுத்த கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும்.

பங்குதாரர்களுடன் இருந்து வந்த நீண்டநாள் பிரச்சினைகள் ஒரு சுமூக முடிவிற்கு வரும். உங்கள் வியாபாரத்தை விருத்தி செய்து கொள்வீர்கள்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் மிகவும் கவனமாக பணிகளை மேற்கொள்வது நல்லது. மேல் அதிகாரிகள் மற்றும் சக ஊழியர்களை அனுசரித்து செல்வது நன்மை தரும். பெண்களுக்கு எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும்.

கலைத்துறையினருக்கு கடன் விவகாரங்கள் கட்டுக்குள் இருக்கும். அரசியல்வாதிகள் கோபமாக பேசுவதை தவிர்ப்பது நல்லது. மேல்மட்டத்தில் உள்ளவர்களுடன் வாக்கு வாதங்கள் ஏற்படலாம். கவனம் தேவை.

மாணவர்களுக்கு கூடுதல் நேரம் ஒதுக்கி பாடங்களை படிக்க வேண்டி இருக்கும். பெற்றோர் சொற்படி கேட்டு நடப்பீர்கள்.

**அஸ்வினி:** இந்த மாதம் புதிய பொறுப்புகள் வந்து சேரும். கிடப்பில் போட்டிருந்த வேலைகளை




செய்வீர்கள். ஊதிய விடயங்களில் நல்ல மனநிலை இருக்கும். வியாபாரிகளுக்கு இலாபம் ஈட்டும் காலமிது. பணியாட்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

இலக்கியம், கதை, கவிதைத் துறைகளில் உள்ளவர்களுக்கு புகழ் கிடைக்கும். பங்குதாரர்கள் மூலம் சில தொந்தரவுகள் நேரிடலாம்.

**பரணி:** இந்த மாதம் பிள்ளைகளின் வளர்ப்பில் கவனம் தேவை. உடல் நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். மாத்திரை செலவினங்கள் குறையும்.

கணவன் மனைவி கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு மறையும். கவனம் தேவை. வீண் வாக்கு வாதம் வேண்டாம். நண்பர்கள் மூலம் அனுகூலம் ஏற்படும்.


**கார்த்திகை 1ஆம் பாதம்:** இந்த மாதம் செலவுகளைப் பற்றி கவலைப்படும் சமயம் வந்துவிட்டது. ஆடம்பரச் செலவுகள் வேண்டாம். இளைய சகோதரத்தின் மூலம் இலாபம் கிடைக்கும் நேரமிது. புத்தம் புதிய நண்பர்கள் கிடைப்பார்கள்.

**பரிகாரம்:** குலதெய்வத்தை பூஜித்து வணங்க குடும்ப பிரச்சினை தீரும். கடன் கட்டுக்குள் இருக்கும்.

**சந்திராஷ்டம தினங்கள்:**
ஒக்டோபர் - 24, 25, 26

**அதிர்ஷ்ட தினங்கள்:**
ஒக்டோபர் - 06, 07

## குடும்பத்தில் சந்தோஷமான சூழ்நிலை காணப்படும்!



**கிரகநிலை** - தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் குரு - சுக ஸ்தானத்தில் சுக்கிரன், கேது - பஞ்சம ஸ்தானத்தில் சூரியன் - ரண ருண ரோக ஸ்தானத்தில் சுக்கிரன் - தொழில் ஸ்தானத்தில் சனி, இராகு என கிரக நிலைகள் உள்ளன.

**பலன்கள்:** இந்த மாதம் காரிய அனுகூலம் உண்டாகும். மற்றவர்களுக்கு உதவ முன் வருவீர்கள். மனதில் இருந்த சஞ்சலம் நீங்கி மகிழ்ச்சியும், நிம்மதியும் கிடைக்கப் பெறுவீர்கள். உங்கள் மீது குற்றம் சொல்ல நினைப்பவர்கள் அதனை விட்டு விடுவார்கள்.

குடும்பத்தில் சந்தோஷமான சூழ்நிலை காணப்படும். உறவு பலப்படும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றமான நிலை காணப்படும். வியாபார நிமித்தமாக பயணங்கள் செல்ல வேண்டி இருக்கும். போட்டிகள் குறையும்.

புதிய ஓடர்கள் பெறுவதில் தடுமாற்றம் உண்டாகும். எந்த வேலையை முதலில் கவனிப்பது என்று குழப்பம் வரும்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் திறமையான பேச்சால் வெற்றி பெறுவார்கள். வாகன யோகம் உண்டாகும். எந்த ஒரு காரியத்திலும் சரியான முடிவுக்கு வர முடியாமல் தடுமாற்றம் உண்டாகும்.

பெண்களுக்கு புத்தி சாதூரியம் அதிகரிக்கும் பிரச்சினைகள் குறையும். கலைத்துறையினருக்கு கடன் விவகாரங்கள் கட்டுக்குள் இருக்கும்.

அரசியல்வாதிகளுக்கு மேல் மட்டத்தில் உள்ளவர்களுடன் வாக்குவாதங்கள் ஏற்படலாம். மாணவர்களுக்கு கல்வியில் நாட்டம் அதிகரிக்கும். ஆர்வமுடன் பாடங்களை படிப்பீர்கள்.

**கார்த்திகை 2, 3, 4 ஆம் பாதங்கள்:** இந்த மாதம் சில மாற்றங்கள் வந்து சேரும். பதவி உயர்வுக்கு உரிய அறிவிப்பு வந்து சேரும். சிலருக்கு வெளியூருக்கு மாற்றலும் வரும். உடனே கைகூடாவிட்டாலும் அதற்கான




விதையை இப்போது ஊன்ற வேண்டிய காலகட்டம் இது. பெற்றோர் நலம் கவனிக்கப்பட வேண்டிய காலம் இது.

**ரோகிணி:** இந்த மாதம் வீடு மாற்றிக்கொள்ள விரும்புபவர்கள் மாற்றிக்கொள்ளத்தக்க தருணம் வந்து சேரும். புதிய வாகனம் யோகம் வந்து சேரும்.

உங்களுக்கு சம்பந்தமில்லாத பிரச்சினைகளில் தலையிடுவதும் கருத்து சொல்வதையும் தவிர்த்தல் நலம். முன்னெச்சரிக்கையுடன் நடந்துகொள்ள வேண்டும்.

**மிருக சிரீடம் 1, 2 ஆம் பாதங்கள்:** இந்த மாதம் உலக வாழ்க்கை யோக வாழ்க்கை இரண்டிலும் சரி சமமான எண்ணங்கள் உண்டாகும். அருளாளர்களின் ஆசீர்வாதங்கள் கிடைக்கும்.

தத்துவ ஆராய்ச்சியில் ஈடுபாடு அதிகரிக்கும். பாகப் பிரிவினை பிரச்சினைகளின்றி சுமூகமாக நடைபெறும். இளைய சகோதரம் குடும்பப் பாரம்பரிய தொழிலில் ஈடுபட்டு இலாபங்களை சேர்ப்பார்.

**பரிகாரம்:** மகா இலட்சுமியை பூஜிக்க பணப் பிரச்சினை நீங்கும். மனநிம்மதி உண்டாகும்.

**சந்திராஷ்டம தினங்கள்:**
ஒக்டோபர் - 01, 27, 28

**அதிர்ஷ்ட தினங்கள்:**
ஒக்டோபர் - 08, 09

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன் சீமெந்து தொழிற்சாலையின் 75 ஆம் ஆண்டு நிறைவு விழா பற்றிய கலந்துரையாடல் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் தொழிற்சாலை அன்னதான மண்டபத்தில் கடந்த 28/09/2025 அன்று தொழிற்சாலை முன்னாள் ஊழியர்களால் நடத்தப்பட்டது.

அதில் பல முக்கியமான தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. இவ் நிகழ்வினை நல்ல முறையில் நடத்துவது சம்பந்தமாக 5 பேர் கொண்ட முன்னாள் ஊழியர் குழு ஒன்று அமைக்கப்பட்டது மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு முன்னாள் ஊழியர்களுக்கும் இவ் விடயம் சம்பந்தமாக அறிவிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

இந் நிலையில் எதிர்வரும் 05/10/2025 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் மாவைக் கந்தன் தொழிற்சாலை அன்னதான மண்டபத்தில் இவ் விடயம் சம்பந்தமாக விரிவாக ஆராயப்பட வுள்ளதால் முன்னாள் பணியாளர்கள் அனைவரையும் தவறாது சமூகமளிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (8)

# மூன்று நூல்களின் அறிமுக நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

மலையகத்தின் புகழ்பெற்ற இளம் எழுத்தாளர் சு.தவச்செல்வனின் மூன்று நூல்களின் அறிமுக நிகழ்வு எதிர்வரும் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் யாழ்ப்பாணம் அம்மன் வீதியில் அமைந்துள்ள எங்கட புத்தகங்கள் இல்லத்தில் வவுனியா மற்றும் தர்காநகர் கல்வியியற் கல்லூரிகளின் ஓய்வுநிலை விரிவுரையாளர் கலாநிதி ந.இரவீந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் நூல் அறிமுக உரைகளை "சிங்கமலை" சிறுகதைத் தொகுதித் தொடர்பாக கவிஞர் சி.கருணாகரன் , "இலக்கியம் கலகம் அரசியல்" விமர்சனத் தொகுப்பு நூல் தொடர்பாக யாழ். பல்கலைக்கழக சமூகவியல் துறையின் சிரேஸ்ட விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணன், "மலையகத்தில் பாரதிச் சிந்தனைகள்" ஆய்வுக் கட்டுரைத் தொகுப்பு பற்றி கலாசார உத்தியோகத்தர் சபா தனுஜன் ஆகியோர் ஆற்றவுள்ளனர். அத்துடன் ஏற்புரையினை நூலாசிரியர் சு.தவச்செல்வன் நிகழ்த்தவுள்ளார். (3)

# ஸ்ரீகமலாம்பிகை உடனுறை ஸ்ரீகைலாச சுவாமி ஆலயத்தில் 02.10.2025 சாரதா நவராத்திரி மானம்பூ தரிசனம்

சாரதா நவராத்திரி தசசண்டீஹோமம் 10 நாள் சிறப்புடன் நிறைவாகிய அருள் இலட்சுமி, சரஸ்வதி கௌரி சமஷ்டி வடிவமாக துர்க்கா மகிஷாசுர மர்த்தினி நாம புகழ் பெற்ற அம்பிகை, மகிசாசுரனாகிய மகிடனது அறியாமை நீக்கி வதைத்த விழாவை தேவர், முனிவர், நம்முன்னோர்.

வானவெளியில் வாழ்த்தவும், அவர்களுடன் மண்ணில் நாமும் எம் அம்பிகையை வாழ்த்தி வணங்கி, அபிராமி அந்தாதியும் ஓதி நமது அறியாமை, பிறவிவினை, நீக்கியும் நாம் எடுத்த நற் செயல்கள் யாவினும் வெற்றி அடை வோம். மகிடன் தலைமேல் -8 அபிராமி அந்தாதி

சுந்தரி எந்தை துணைவி என் பாசத் தொடரையெல்லாம்

வந்தரி சிந்துர வண்ணத்தினாள் மகிடன் தலைமேல்

அந்தரி நீலி அழியாத கன்னிகை ஆரணத்தோன்

கம்தரி கைத்தலத்தாள் மலர்த்தாள் என் கருத்தனவே

நவராத்திரியில் அம்பிகையின் திருவிளையாடல்களில் முக்கியமானது, மகிஷாசுரனை வதைத்த வரலாறு தத்துவமாக நல்லூர் கமலாம்பிகா சமேத ஸ்ரீ கைலாச நாதசுவாமி ஆலயத்தில் 02.10.2025 சாயந்திரம் 4 மணியளவில் தரிசித்து நாம் எடுக்கும் நல்ல செயல்கள் யாவினும் வெற்றியடைதல் ஆகும்.

எனது பந்தபாசங்கள் தேவியானவள் அழித்து, இறைவி அருளால் நாம். இல்லறத்தில் இருந்தாலும் ஆசா பாசங்கள் அற்ற நிலையாக, தானே எழுந்தருளி வந்து தீர்க்கும் "சுந்தரி எந்தை துணைவி. என்பாசத் தொடரையெல்லாம் வந்தரி சிந்துர வண்ணத்தினாள்".

அம்பிகை மகிஷாசுரனை வதைத்த வரலாறு முக்கியமாகவும். மகிஷா சுர மர்த்தினி" எனும் நாமமும் போற்றுகிறது மகிஷாசுரன் கடுந்தவமியற்றி மகிடன் எவராலும் மரணமில்லாத வரம் பெற்றான்.

அப்படி மரணமானால் அது பெண் தெய்வத்தால் தான் அமையவேண்டும் எனும் வரத்தைப் பெற்றுவிட்டான் பிரமதேவனிடம்.

அவ்வசுரன் மகிடபுரி என்னும் நகரை அமைத்து. குருவாகிய சுக்கிராசரியர் வழி காட்டலில் பிரமதேவன் மூலம் கிடைத்த பெரும் வரத்தால், மூவுலகையும் வென்று தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் துன்பம் செய்தான். தேவர்களும் முனிவர்களும் திருமாலின் ஆலோசனைப் படி மும் மூர்த்திகளும் மற்றவர்களும் தேவியை மனத்தில் இருத்தி ஓர் சிறந்த வழிபாட்டில் சிறிது, சிறிதாக அருள் தெய்வீக ஒளியாக நவராத்திரியாக 9 நாளும் அருள் வளர்ந்து விஜய தசமியாகிய 10 ஆம் நாள் இலட்சுமி, சரஸ்வதி, கௌரி ஆகிய மூவரின் சமஷ்டி (கூட்டு) வடிவமாகப் பதினெட்டு கரங்களுடன் பராசக்தி துர்க்கை யாகத் தோன்ற முனிவர், தேவர், எல்லோரும் வழிபட்டுப் பணிந்து வணங்க. கொற்றவையாகிய துர்க்கை போர்க்களம் புகுந்த மகிடனை வதைத் தாள். அவனுடைய தலை மீது தனது திரு வடி பதிய நின்றான் அன்று முதல் அவள் மகிஷாசுர மர்த்தினி எனவும் புகழ் பெற்றாள்.

எருமை அறியாமையைக் குறிக்கும் சின்னம் அம்பிகையின் திருவடி தீட்சையினால் அறியாமை நீங்குகிறது. "மகிடன் தலைமேல் அந்தரி" சிவன், முயலகனை அடக்கியதும், முருகன் ஆட்டுக்கிடாவை அடக்கியதும் இதே கருத்து உணர்த்தும் வரலாறுகளே!

இதனை நேரில் கண்ட தேவர்களும் முனிவர்களும் தேவியின் திருவருளை வியந்து போற்றி பலவாறு துதித்தனர்.

நாமும் 02.10.2025 இன்று மானம் பூ எனும் வாழைவெட்டும் எங்கும் ஆலயத்திலும், நல்லூரில் சிறப்பான விழாவாகக் கொண்டாடி, அபிராமி அந்தாதி முழுக்கவும் ஓதிப்பாடி "அந்தரி" என்றால்

அனைத்துயிர்களின் உள்ளே தஹராகாச மென்னும் இதயத்தானத்தில் இருப்பவளாகிய தேவியை சாரதா நவராத்திரி தரிசனமும் "மானம்பூ" உற்சவம் ஸ்ரீ கமலாம்பிகா சமேத ஸ்ரீகைலாசநாத சுவாமி அருள் மிகு காட்சிகளை காண்போம்.

"மாநோன்பூ" என அழைத்தது. "மானம் பூ" மருவி வந்தது.

"நீலி" - மகிடனை வதைத்த அவளே நீல நிறமுடைய காளியும் ஆவாள்! நம்மிடம் மாயையினால் திரோதனம் மறைத்தல் செய்வதால் அம்பிகை "நீலி'' ஆனால். "அழியாத கன்னிகை" அகிலாண்டகோடி ஈன்ற அன்னை, தனது கண்களை மூடித் திறப்பதன் மூலமே கன்னித்தாய் உலகங்களைப் படைக்கிறாள். மகிடனை வதைத்த துர்க்கையை அபிராமிப்பட்டரும் அழியாத கன்னிகை என்றார். "ஆரணத் தோன் கம்தரி கைத்தலத்தான்" இங்கு இறைவனைப்போல வேதங்களைத் தந்த பிரம்ம கபாலத்தைத் தாங்கி நிற்கிறாள்.

பிரம்மாவின் கையெழுத்தையும் மாற்றும் ஆற்றல் உடையவள்.

கபாலத்தை ஏந்தும் தேவியை வணங்குபவர், மாந்திரீகத்துக்கு தீங்கு நாடாது. " சுந்தரி எந்தை துணைவி மலத்தான் என் கருத்தனலே" இது ஓர் அருள் பொலிவு "அபிராமி அம்மாசமேத அமிர்தகடேஸ் வரர்" ஆலய அழகிய, என் தந்தையாகிய அமுதீசரின் துணைவியுமாகிய அபி ராமியின் மலர்ப்பாதங்கள் என் சிந்தை யாகும்.

இங்கு நவக்கிரகங்கள் இல்லாத, அட்ட வீரட்டத்தல ஆகிய இத் தலம் இங்கு தான் "அபிராமி அந்தாதி" அபிராமிப்பட்டர் அம்பாள் அருளால் பொழிந்த அந்தாதி ஓதி நவராத்திரியிலும், விஜய தசமியிலும் வழிபடுவோம். நாம் எடுக்கும் நற் செயல்கள் யாவினும் வெற்றி யடைவோம்.

தேவி நமக்கு அரணாக மூலதுர்க்கையாகவும் மற்றும் ஒன்பது வடிவங்களாகிய வனதுர்க்கை, சூலினி துர்க்கை, ஜாதவேதா துர்க்கை, சினம் சாந்தி, நோய், பீடைகளை அழிப்பவளும், **சாந்திதுர்க்கை**, சபரி துர்க்கை, ஜ்வாலா துர்க்கை,இலவணதுர்க்கை, ஆசுரிதுர்க்கை, தீபதுர்க்கை இவ்வாறு இன்னும் பலவாக ஜெயதுர்க்கை அஷ்டாக சபுஜ துர்க்கை, இராகுகால துர்க்கை சாமுண்டி, கெம்பம்மா இவ்வாறு பல நாமங்களையும் பக்தர்களுக்கு அருள் பாலிக்கிறாள்.சான்றோர்கள் பார்வையில் அம்பிகை மெய்பொருள் என்பது கருத்து அந்தாதி தினம் ஓதி, மெய்யான மேல் நிலையும், கனவில் தேவியின் தரிசனம், முன்னோர்களும் நற்கதி, பிறவாமுக்தி நிலை, மனக்க வலைகள் நீங்கி மகிழ்ச்சி, உள்ளத் தெளிவு, தன்னிறைவு தம்பதிகள் அன்பு டன் இணைந்திருத்தல், சகல செல்வ யோகமிக்கு பெருவாழ்வு மன அமைதி எந்த நிலையிலும் கடவுள் நினைப்பும் இன்னும் பல உகை நாயகியைப் போற்றும் அபிராமி அந்தாதியைப் படித்து , உலகம் இடர் நீங்கிஇன்பம் எய்துவோம்

"கோபுரதரிசனம் கோடி புண்ணியம்"

தெற்குக் கோபுரம் அமைய பிரார்த்திப்போம்

நலன் விரும்பிகள் புராண வரலாற்றை பூராகப் படித்து

பிரதியை பகர்ந்து அம்பிகை அருள் பெறுவோம்.

(C-4003)

க.கு.க.சிவபாலன்
அன்பு- சிவம்- அம்பிகை பாராயணம்
திருமுறை, திருப்புகழ் ஓது தொண்டர்.



# இராசிபலன்

02.10.2025
புரட்டாதி 16 , வியாழக்கிழமை
தசமி பிற்பகல் 3.36 மணிவரை
உத்தராடம் காலை 6.46 மணிவரை

சுப நேரம் 7.32-9.02 மணிவரை
இராகுகாலம் 1.32-3.02
சீரடி சாயிபாபா சமாதி தினம்
கேதாரகௌரி விரதாரம்பம்,

விஜயதசமி,
சந்திராஷ்டமம், புநர்பூசம்.


வளவன்




எந்தக் காரியத்தையும் எளிதில் செய்து முடித்து வெற்றி காண்பீர்கள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், வீட்டைச் சீரமைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.




மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர், புதிய முயற்சிகள் கைகூடும், சொத்துப் பிணக்குகள் தீரும், வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள்.





குறைவாகப் பேசினாலும் குறை கூறிப் பேசாதிருப்பது நல்லது, உடல் நலனில் கவனம் தேவை, வழிபாட்டால் சுகம் காண வேண்டிய நாள், நட்பு பகையாகாமலிருக்க கவனம் தேவை.




புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, எண்ணியது நிறைவேறும் நாள், முன்னேற்றம் கருதிய பயணமொன்றை மேற்கொள்வீர்கள், பொது வாழ்வில் கௌரவம் கூடும்.




நல்லவர்களின் தொடர்புகள் கைகூடும், கடன்சுமை குறைய புதிய வழியைக் கையாள்வீர்கள், குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும் வாய்ப்புண்டு, உற்சாகமான நாள்.





தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பொது நலனில் அக்கறை காட்டுவீர்கள்.




அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம் பெறலாம், புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் உருவாகும், வசதி வாய்ப்புகளைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்.




இனிய செய்திகள் இல்லம் வந்து சேரலாம், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், விருந்தினர் வருகையுண்டு, எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.




குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், சுப காரியப் பேச்சுக்களால் முன்னேற்றம் காணும் நாள், விலை உயர்ந்த பொருட்ளை வாங்கி மகிழ்வீர்கள்.




வியாபார நலன் கருதி பெரிய மனிதர்களைச் சந்திக்கும் எண்ணம் உருவாகும், மன அமைதி கூட மகத்தான வழிபாடுகளைச் செய்யவேண்டிய நாள்.




குடும்ப பெரியவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, மறக்க முடியாத சம்பவங்கள் இடம் பெறலாம், சுப விரயங்கள் கூடும் நாள், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.




ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் கூடும், செல்வாக்கு மேலோங்கும் நாள், போசன நன்மையுண்டு.

அற்ப[illegible]மாக வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பருத்தித்துறை முனையில்

# சுற்றுலாவை மேம்படுத்த படகுகள் கையளிப்பு

(அராலி)

யாழ்ப்பாணம் - வடமராட்சி பருத்தித்துறை முனை கடற்கரை பகுதியில் தனியார் நிறுவனமான டனுசா மரைன் நிறுவனத்தின் மூன்று மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் சுற்றுலாவை ஊக்குவிக்கும் நோக்கில் படகு சவாரிக்கான இயந்திர படகு மற்றும் சிறிய துடுப்பு படகுகள் நேற்று கைளிக்கப்பட்டுள்ளன.

மிக குறைந்த கட்டணத்தில் சாதாரண மக்களும் பயன்படுத்தக் கூடிய வகையில் இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பரீட்சார்த்த படகு சவாரி ஆரம்ப நிகழ்வுகள் பருத்தித்துறை நகர தலைவரும், பிரபல தொழிலதிபருமான வின்சன்ட் டீ போல் டக்ளஸ் போல் தலைமையில் இடம் பெற்றது.

இதனை டனுசா மரைன் நிறுவன முகாமைத்துவ பணிப்பாளர் சுமித்தி பெர்ணாண்டஸ் தொடக்கி வைத்தார்.

இன்றைய இந்நிகழ்வில் கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் பிரதிநிதிகள், சமூக ஆதரவாளர்கள், டனுசா மரைன் நிறுவன அதிகாரிகள் என பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். (8-104)

# ஆட்சேர்ப்பு செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பொதுச் சேவையின் கீழ் காணப்படும் கால்நடை அபிவிருத்திப் போதனாசிரியர் தரம் III இல் 20 வெற்றிடங்களை நிரப்புவதற்கும், விவசாயப் போதனாசிரியர் தரம் III இல் 27 வெற்றிடங்களை நிரப்புவதற்கும் திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பங்கள் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவால் கோரபட்டுள்ளதாக ஆணைக். குழுவின் செயலாளர் ஆ.சிறி அறிவித்துள்ளார்.

இது தொடர்பான முழுமையான அறிவித்தலை www. np.gov.lkExams and Recruitments Advertisement2025 எனும் வடக்கு மாகாண சபை இணையத்தள தொடர்பினூடாக பார்வையிட முடியும் என்றும் தகைமையுடையவர்கள் விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டவாறு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு அவர் குறிப்பிட்டுள்ளார். (8)

# இரணைமடு பெரும்போக பயிர்ச்செய்கைக் குழுக் கூட்டம்

(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசனக் குளமாகிய இரணைமடுக் குளத்தின் கீழான 2025/ 2026 ஆம் ஆண்டுக்கான பெரும்போக நெற்செய்கை தொடர்பான கலந்துரையாடல் அண்மையில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன் தலைமையில், இரணைமடு கமக்காரர் அமைப்புக்களின் சம்மேளன கட்டடத்தில் குறித்த கலந்துரையாடல் நடைபெற்றது.

2025/ 2026 ஆம் ஆண்டுக்கான பெரும்போக நெற்செய்கையினை ஆரம்பிக்கப்படுவதற்கான முன்னாயத்த கலந்துரையாடலாக நடைபெற்ற இக் கலந்துரையாடலில் பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டு பயிர்ச்செய்கைக்கான கால அட்டவணை தயாரிக்கப்பட்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

குறிப்பாக தற்பொழுது இரணைமடு குளத்தின் நீர் மட்டமானது 19/5 அடியாக காணப்படுகிறது. இம்முறை 21,300 ஏக்கர் நிலப்பரப்பில் நெற் செய்கை பண்ணப்படவுள்ளது.

நெற்செய்கைக்கான ஆரம்ப விதைப்பு திகதியாக 01.10.2025 ஆம் திகதி தொடக்கம் 05.11.2025 ஆம் திகதி வரையான காலப் பகுதி தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும், நீர் பாசனத்திற்கான ஆரம்பக் காலப் பகுதியாக 05.11.2025 ஆம் திகதி தொடக்கம் 15.02. 2026 ஆம் திகதி காணப்படுகின்றது.

இதனை விட 28.02. 2026 அறுவடைக்கான முடிவுத் திகதியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இக் கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்ட பதில் விவசாய பணிப்பாளர், கண்டாவளை மற்றும் கரைச்சி பிரதேச செயலாளர்கள், கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசன பொறியியலாளர், கிளிநொச்சி கிழக்கு நீர்ப்பாசன பொறியியலாளர், மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள பிரதி ஆணையாளர், கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர், கமநல காப்புறுதிச் சபையின் மாவட்ட உதவிப் பணிப்பாளர், விவசாயத் திணைக்களம் சார்ந்த உத்தியோகத்தர்கள், விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டிருந்தனர். (8-316)

## வடமராட்சியில்

# சட்டவிரோத கட்டடங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை

(அராலி)

யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்கில் சில பிரதேசங்களில் அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டடங்களுக்கு சிவப்பு நோட்டீஸ் ஒட்டப்பட்டுள்ளது. வத்திராயன், மருதங்கேணி, உடுத்துறை ஆகிய பகுதிகளில் பிரதேச சபையின் அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டடங்களுக்கு எதிராக பருத்தித்துறை பிரதேச சபையால் சிவப்பு நோட்டீஸ் ஒட்டப்பட்டுள்ளது.

அதில் "பிரதேச சபையின் அனுமதியின்றி தங்களால் மேற்கொள்ளப்படும் கட்டுமான பணிகளை உடன் நிறுத்தவும். மீறினால் சட்ட நடவடிக்கைக்கு உட்படுவீர்கள்" என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (8-104)

# கோப்பாயில் புத்தக அரங்க விழா

(யாழ்ப்பாணம்)

தேசிய கலை இலக்கியப் பேரவையின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு "நூறு மலர்கள் மலரட்டும்" என்ற தொனிப்பொருளில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வரும் புத்தக அரங்க விழாவின் இருபத்தெட்டாவது நிகழ்வு இம் மாதம் 3, 4 மற்றும் 5 ஆம் திகதிகளில் கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

நாளை வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இப் புத்தக அரங்க விழாவின் முதல் நாள் மாலை நிகழ்வாக "ஈழத்து நூல்களை அறிவோம்" என்ற தொனிப் பொருளில் நூல்களின் அறிமுகமும் கலந்துரையாடலும் கலாநிதி கார்த்திகேசு திருப்பதி நினைவு அரங்கில் ஓய்வு நிலை ஆசிரியர் சு.சிவனேசராசன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் நூல்களின் அறிமுக உரைகளை கணபதி சர்வானந்தாவின் "இவர்கள் மகாத்மாக்கள்" நூல் தொடர்பாக எழுத்தாளர் வடகோவை வரதராஜன் மு. அஜந்தனின் "அரங்க ஒளியியல்" புத்தகம் பற்றி அரங்கவியலாளர் கலாநிதி தே. தேவானந்த், இ.இராஜேஸ் கண்ணனின் "சமயமும் சமூக-பண் பாட்டு உருமாற்றமும்" நூல் பற்றி ஓய்வுநிலை விரிவுரையாளர் கலாநிதி ந.இரவீந்திரன் பத்மா இளங்கோவனின் "செந்தமிழ் சிறுவர் கதைப் பாடல்கள்" நூல் பற்றி சட்டத்தரணி சோ. தேவராஜா உரைகளை ஆற்றவுள்ளனர்.

விசேட கலை நிகழ்வுகளாக சண் நாடகக் குழுவினரின் தயாரிப்பில் மாவை நித்தியானந்தனின் எழுத்துருவில், பு.கணேசராசாவின் நெறியாள்கையில் "முட்டை" மற்றும் பு.கணேசராசாவின் எழுத்துரு, நெறியாள்கையில் "ஆட்டுக் குட்டி?" ஆகிய நாடகங்களும் இடம் பெறவுள்ளன.

மேலும் இந் நிகழ்வின் விசேட அம்சமாக மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும் வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய மூன்று தினங்களும் காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (8)

# யாழ்ப்பாணம் மாநகரசபை கேள்வி அறிவித்தல்

**கழிவகற்றல் சேவைக்கு உழவு இயந்திரங்களை சாரதி மற்றும் தொழிலாளர்களுடன் வாடகைக்கு அமர்த்துவதற்கான கேள்வி கோரல் - 2025**

01. மாநகர சபை எல்லைக்குள் தரம் பிரிக்கப்பட்ட கழிவுகளை உழவு இயந்திரங்கள் மூலம் அகற்றுவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.
02. வாகனம் பயணிக்கின்ற தூரம் GPS மானி வாசிப்பின் அடிப்படையில் மாத்திரமே கணிக்கப்பட்டு வாடகைக்கட்டணமானது தீர்மானிக்கப்படும்.

பணிக்கப்படும் வட்டாரத்திலிருந்து தரம் பிரிக்கப்பட்ட கழிவுகளை (உணவுக் கழிவுகள், உக்கக்கூடியவை, பொலித்தீன், பிளாஸ்ரிக், கண்ணாடி, ஏனையவை) மக்களுக்கு இடையூறு இல்லாமல் மூடிய வாகனத்தில் பாதுகாப்பான முறையில் அகற்றி காக்கைதீவு மற்றும் கல்லுண்டாயில் அமைந்திருக்கும் கழிவு சேர் நிலையத்திற்கு கொண்டு சென்று கழிவகற்றும் சேவைக்கு 6 மாத காலத்திற்கு (01.11.2025 - 30.04.2026) தகுதி வாய்ந்த சேவை வழங்குநரிடமிருந்து (உழவு இயந்திரம், சாரதி, தொழிலாளர் உட்பட) யாழ் மாநகரசபை பிராந்திய பெறுகைக்குழு தலைவரால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேற்படி சேவைக்கு தகுதியானவர்கள் கேள்விப் படிவங்களை 02.10.2025 - 15.10.2025 வரையான காலப்பகுதியில் கடமை நாட்களில் பி.ப 2.00 மணி வரை மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. 1000.00 பணமாகச் செலுத்தி விண்ணப்பங்களை பெறுகை முகாமைத்துவப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம். குறித்த சேவை தொடர்பான மேலதிக விபரங்களை அலுவலக நாட்களில் யாழ் மாநகரசபையின் பொதுச் சுகாதாரப் பொறியியல் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம். ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை தொலைபேசி இல - 0212217691, மின்னஞ்சல் முகவரி - mcjaffnamailv@yahoo.com மூலம் காலை 9.00 மணி முதல் மாலை 3.00 மணிவரை பெற்றுக் கொள்ள முடியும்.

பூர்த்தி செய்த விண்ணப்பப் படிவங்களை 16.10.2025 ஆம் திகதி மு.ப 11.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக **தலைவர், பிராந்திய பெறுகைக்குழு, மாநகரசபை, யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு நேரில் / பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"கழிவகற்றல் சேவைக்கு உழவு இயந்திரங்களை சாரதி மற்றும் தொழிலாளர்களுடன் வாடகைக்கு அமர்த்துவதற்கான கேள்வி கோரல் - 2025"** என தவறாது குறிப்பிடப்படல் வேண்டும்.

கேள்விகள் 16.10.2025 ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு கேள்விதாரர் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக்குழு,**
**மாநகரசபை, யாழ்ப்பாணம்**

(C-4005)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித நேயத்தோடு மக்களின் உணர்வைப் புரிந்து கொண்டால், தனது மரியாதை தானே உயரும்.

– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அரச நிர்வாகத்தில் தனிநபர் ஆதிக்கம்

அரசியல் என்பதும் அரச நிர்வாகம் என்பதும் வித்தியாசமானவை.

அரசியலில் பித்தலாட்டங்கள், பொய்கள், புரட்டுக்கள் காணப்படலாம்.

ஆனால் அரச நிர்வாகம் என்பது எப்போதும் சுற்றுநிருபங்களுக்கும் சட்ட திட்டங்களுக்கும் உட்பட்டதாகக் காணப்படும்.

ஆம், அரச நிர்வாகம் என்பது எப்போதும் பதில் கூறுகின்ற பொறுப்பைக் கொண்டது. ஆட்சித் தலைவர்கள், அமைச்சர்கள் தேர்தலை மையப்படுத்தி தமது தீர்மானங்களை எடுப்பர். பொதுமக்களுக்கு உத்தரவாதங்களை கொடுப்பர். அதேநேரம் தமது தீர்மானங்களையும் உத்தரவாதங்களையும் நிறைவேற்றுமாறு அரச அதிகாரிகளுக்கு அழுத்தம் தருவர்.

இங்குதான் அரச அதிகாரிகள் அதாவது அரச நிர்வாகம் ஆட்சியாளர்களின் தீர்மானங்கள், வாக்குறுதிகள் என்பவற்றை சட்ட திட்டங்களுக்குள்ளால் நிறைவேற்றுகின்ற பணியைச் செய்கின்றவர்களாக இருக்கின்றனர்.

அதாவது அமைச்சர்கள் உத்தரவிட்டாலும் கூட, அதனை நிறைவேற்றுவதற்குச் சட்டமும் சுற்றுநிருபங்களும் இடம் தருகின்றனவா என்பதைச் சரிபார்த்து சரியானதைச் செய்வதும் பொருத்தமற்றதைத் தவிர்ப்பதும் அரச நிர்வாகங்களின் கடமையாக அமைகிறது.

அதேவேளை திணைக்களங்களில் கடைப்பிடிக்கின்ற சம்பிரதாயங்கள் மற்றும் மக்களின் பண்பாடு கலாசாரம் தேசவழமை என்பன தொடர்பிலும் அரச நிர்வாகம் கவனத்தில் கொண்டு, தனது நிர்வாகத்தைச் சிறப்பாக ஆற்றி மக்களினதும் நாட்டினதும் உயர்வுக்காகப் பாடுபடுகின்ற பொறுப்பைக் கொண்டதாகும்.

இங்கு தேசவழமை, மக்களின் கலை, கலாசாரம் என்ற விடயங்களை நாம் கவனத்தில் எடுப்போமாயின், முஸ்லிம் மக்கள் வாழுகின்ற இடங்களில் பன்றி இறைச்சிக் கடைகளைத் தவிர்ப்பது – சைவ மக்கள் வாழும் இடங்களில் மாட்டிறைச்சிக் கடை அமைப்பதற்கு அனுமதி மறுப்பது என்பன குறித்த மக்களின் வாழ்வியல் பின்னணியோடு சம்பந்தப்பட்டதாகும்.

இதற்கு முரணாக மேற்படி விடயங்கள் அனுமதிக்கப்படுமாயின், அங்குதான் மக்களின் எதிர்ப்பு வெளிப்படத் தொடங்கும்.

ஆக, மக்களின் எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல் நான் செய்வேன். செய்தே ஆக வேண்டும் என ஓர் அரச அதிகாரி எண்ணுவாராயின், அவர் அரச நிர்வாகத்துக்குப் பொருத்தமற்றவர் – சர்வாதிகாரத்தன்மையுடையவர் – தனக்குக் கிடைத்த அரச பதவியைத் துணைக் கொண்டு மக்கள் சமூகத்தை குழப்புகின்ற சதி வேலையைச் செய்ய முற்படுகிறார் என அனுமானிக்கலாம்.

எனவே அரச அதிகாரிகள் – நிர்வாகிகள்; தொன்று தொட்டு பின்பற்றுகின்ற மக்களின் சமூக கலாசார பண்பாட்டு விழுமியங்களை சிதைக்காமலும் தொன்று தொட்டு வருகின்ற நடைமுறைகளைக் கவனத்தில் எடுத்தும் தமது நிர்வாகப் பணிகளை ஆற்ற வேண்டும்.

**எனினும் அரச நிர்வாகிகள் சிலர் தனி மனித ஆதிக்கத்தை – சொந்த விருப்பு வெறுப்பை – இன, மத, மொழி பேதங்களை அமுலாக்க முற்படுகின்றனர்.**

**இந்நிலைமை முற்றுமுழுதாகத் தவிர்க்கப்பட வேண்டும். இல்லையேல் அதன் பின் விளைவு பாரதூரமானதாக அமையும்.**

# பெரும்பான்மைப் பலம் கொண்ட அரசு இருந்தும் மக்களுக்குப் பயன் இல்லை

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

நாட்டின் வரலாற்றில் இதுவரை இல்லாத அளவுக்கு 159 பேருடன் பெரும்பான்மை பலம் கொண்ட அரசாங்கம் இருந்தும் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஷ குற்றம் சாட்டியுள்ளார்.

அநுராதபுரம் கலாவெவப் பகுதியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய அவர், மக்கள் தற்போது தமது குறைபாடுகளை அதிகாரம் இல்லாத எதிர்க்கட்சித் தலைவரிடமே முன்வைக்கின்றனர் எனத் தெரிவித்தார்.

இலட்சக்கணக்கான வாக்குகளுடன் அதிகாரத்தை வழங்கிய போதும் அரசாங்கம் மக்களுக்கு எதிர்பார்த்த பதிலையோ தீர்வையோ வழங்கவில்லை.

கலாவெவ போன்ற விவசாயப் பகுதிகளில் உள்ள மக்களுக்குத் தேவையான உயர்தர விதைகள், உரங்கள், பூச்சி நாசினிகள் கிடைப்பதில்லை.

வாக்குறுதியளிக்கப்பட்ட நெல்லுக்கான உத்தரவாத விலையான ரூ.150ம் கிடைக்கவில்லை.

யானை - மனித மோதல் போன்ற பிரச்சினைகள் "ஒரே கையெழுத்தில்" தீர்க்கப்படும் எனக் கூறப்பட்ட போதிலும் இதுவரை எதுவும் நடக்கவில்லை.

விவசாயிகளின் பிரச்சினைகள் குறித்துப் பாராளுமன்றத்தில் கேள்வியெழுப்பினால் ஆளும் தரப்பினர் வாயை அடைக்க முயற்சிப்பதாகவும் சஜித் பிரேமதாஷ குற்றம் சாட்டினார்.

எவ்வாறாயினும் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண எதிர்க்கட்சி அனைத்து வழிகளிலும் தலையிடும் என்றும் அவர் உறுதியளித்தார். (ம-7)

## மன்னார் காற்றாலை மின் கோபுரங்களை எதிர்த்தோருக்கு எதிராக வழக்குத் தாக்கல்

(மன்னார்)

மன்னார் நகரப் பகுதிக்குள் கடந்த வெள்ளிக்கிழமை (26) இரவு மக்களின் எதிர்ப்பையும் மீறிக் கொண்டு வரப்பட்ட காற்றாலை மின் கோபுரங்கள் அமைப்பதற்கான பொருட்களை மன்னார்நகருக்குள் கொண்டுவர வேண்டாம் எனப் போராட்டத்தில் ஈடுபட்ட மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை மார்க்கஸ் அடிகளார் உள்ளடங்கலாக போராட்டத்தில் ஈடுபட்ட 6 நபர்களுக்கு எதிராகப் பொலிஸார் வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.

இவ்வழக்கானது நேற்றுப் புதன்கிழமை (01) மன்னார் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்நிலையில் அருட்தந்தை மார்க்கஸ் அடிகளார் உள்ளிட்ட அறுவரும் சட்டத்தரணி பா.டெனிஸ்வரன் ஊடாக நீதிமன்றில் முன்னிலையாகினர். இதன் போது குறித்த நபர்கள் சார்பில் மன்றில் ஏனைய சட்டத்தரணிகளும் தமது ஆதரவைத் தெரிவித்தனர்.

விசாரணைகளை மேற்கொண்ட நீதவான் குறித்த 5 சந்தேக நபர்களையும் ஒவ்வொரு சந்தேக நபர்களும் தலா 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப் பிணையில் செல்ல நீதவான் அனுமதியளித்ததோடு அடுத்த வழக்கு விசாரணைகளை எதிர்வரும் நவம்பர் மாதம் 17 ஆம் திகதிக்கு தவணையிட்டார்.

இதேவேளை கடந்த வெள்ளிக்கிழமை இரவு மக்கள் எதிர்ப்புப் போராட்டம் செய்த நிலையில் பொலிஸாரின் தாக்குதலில் காயமடைந்த மூவர் மன்னார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் கைது செய்யப்பட்டு மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் குறித்த மூவரையும் தலா 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,285)

## யாழ்.பல்கலையில் வித்தியாரம்பம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பதியுறை ஸ்ரீபார்வதி சமேத பரமேஸ்வரன் ஆலயத்தில் விஜயதசமி நன்னாளான இன்று காலை 08.00 மணிக்கு விசேட வசந்த மண்டபப் பூசைகளைத் தொடர்ந்து அம்பிகை மகிடாசுரவர்தினியாக எழுந்தருளி மானம்பூ எனப்படும்வாழை வெட்டு உற்சவம் இடம்பெறவுள்ளது.

அதனைத்தொடர்ந்து அம்பிகைக்கு பிராயச்சித்த அபிஷேகமும் காலை 10மணி முதல் கலைகளின் அதிபதியாகிய சரஸ்வதிதேவி முன்னிலையில் வித்தியாரம்ப நிகழ்வுகளும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து மன்றத்தின் ஏற்பாட்டில் சிறப்புற இடம் பெறவுள்ளது. (ம-7)

## வியாக்ரன் நூல் அறிமுக விழா

ஜீவநதி கொமிக்ஸ் வெளியீட்டில் "வியாக்ரன்" நூல் அறிமுக விழாவானது நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் யாழ்ப்பாணம் கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

வித்தியாலயபிரதி அதிபர் தவகீஸ்வரன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் நூலின் அறிமுக உரையையாழ்ப்பாணப் பல்கலைக்கழக சைவ சித்தாந்தத்துறை தலைவர் கலாநிதி செல்வமனோகரன் அவர்கள் ஆற்றவுள்ளார். (ம-7)

## உணவு ஒவ்வாமையால் 45 மாணவர்கள் பாதிப்பு

(பொலநறுவை)

பொலநறுவை - ஹிங்குரக்கொட, பக்கமுன கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை ஒன்றில் சுமார் 45 மாணவர்கள் உணவு ஒவ்வாமை காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உலக சிறுவர்கள் தினத்தை முன்னிட்டு அந்த பாடசாலையில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கப்பட்ட உணவு காரணமாகவே இந்த நிலைமை ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

நிகழ்ச்சி முடிந்து மாணவர்கள் வீடு திரும்பியதன் பின்னர் சுகவீனமுற்றுள்ளனர்.

இதனையடுத்து பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளைப் பக்கமுன பிராந்திய வைத்தியசாலைக்கு அழைத்து சென்றுள்ளனர்.

அவர்களில்பல மாணவர்கள் வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருவதுடன் சிலர் சிகிச்சைகளின் பின்னர் வீடு திரும்பியுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து பக்கமுன பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்
## ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் நாட்டின் வளர்ச்சி
### பகுதி VI

13

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம். தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

அவரது பெருமுயற்சியினால் 1891 இல் கொழும்பு முஸ்லீம் கல்விச் சங்கம் அமைக்கப்பட்டது. அடுத்த ஆண்டு (1892) சங்கம் கட்டி முடித்த சாஹிரா (Zahira) பாடசாலை திறக்கப்பட்டது.

அப்பாடசாலை முஸ்லீம் கலாச்சாரத்திற்கேற்ற வகையில் முஸ்லீம் மாணவர்க்குப் புது முறைக் கல்வி வழங்கத் தொடங்கிற்று. இதனைத் தொடர்ந்து கொழும்பு, கண்டி, கம்பளை ஆகிய இடங்களில் ஆங்கில முஸ்லீம் பாடசாலைகளும், பெண் பாடசாலைகளும் நிறுவப்பட்டன.

**வைத்தியத்துறையில் ஏற்பட்ட மாற்றம்**

இலங்கையில் வைத்தியத்துறை, பிரித்தானியர் இலங்கையைக் கைப்பற்றிய ஆரம்ப நாட்களில் இருந்து நிறுவப்பட்ட தொன்றாகும். ஆரம்பத்தில் இலங்கைக்கு வந்த பிரித்தானியப் படைகளின் சுக நல தேவைகளை ஈடுசெய்யும் நோக்குடன் நிறுவப்பட்ட இத்துறை, இராணுவ நிருவாகத்தின் கீழ் இயங்கி வரலாயிற்று. அந்நிருவாகத்தின் கீழ் கொழும்பு, யாழ்ப்பாணம், திருகோணமலை, காலி எனுமிடங்களில் மருத்துவ நிலையங்கள் அமைக்கப்பட்டு, அவற்றை வைத்திய மேற்பார்வையாளர் (Medical Overseers) நிருவகித்து வந்தனர்.

இவை வைசூரி, பேதி போன்ற தொற்று நோய்கள் பரவாது தடுப்பூசி போட்டு அவற்றினால் ஏற்படும் அழிவைக் கட்டுப்படுத்தின. இவ்விதமாக மேற்கத்திய வைத்திய முறைகள் தலைகாட்டத் தொடங்கிய ஆரம்ப காலத்தில், கிராமிய மக்கள் ஆயுள்வேத முறைகளையே பெரும்பாலும் பின்பற்றி வந்தனர்.

1858 இல் தான் வைத்தியத்துறை இராணுவக் கட்டுப்பாடுகளினின்று விடுதலை பெற்று தனித்தியங்கத் தொடங்கியது. குடியியல் வைத்தியப் பகுதியின் (Civil Medical Establishment) முதற் தலைவராக நியமிக்கப்பட்டவர், கிறிஸ்தோப்பர் எலியட் (Christopher Elliot) என்பவர்.

1866 அளவில் 40 வைத்தியசாலைகளும் 66 டிஸ்பென்சரிகளும் தீவின் சகல பாகங்களிலும் காணப்பட்டன. 1870 தொடக்கம் மேற்கத்தேய வைத்திய முறைகள் இலங்கையில் உறுதியாக வேரூன்றத் தொடங்கின. சேர் வில்லியம் ஹென்றி கிரெகரி, தீவின் எல்லாப் பகுதிகளிலும் டிஸ்பென் சரிகளைக் கட்டுவித்து, அவற்றை மாவட்ட வைத்திய அதிகாரிகளின் மேற்பார்வையின் கீழ் விட்டார். பிரதான நகரங்களில் ஆஸ்பத்திரிகள் கட்டப்பட்டு வைத்திய அதிகாரிகளும் நியமிக்கப்பட்டனர்.

நடுத்தர வகுப்பினர் மேற்கத்தேய வைத்திய முறைகளைக் கற்பதிலும் அதனைப் பயிற்சிப்பதிலும் ஊக்கங் காட்டினர். 1864 இல் வைத்தியக் கல்லூரி நிறுவப்பட்டது. இங்கு வைத்தியர்கள் மாத்திரமன்று, டிஸ்பென்சரிகளின் அதிகாரிகளான அப்போத்திக்கரிகளும் பயிற்றப்பட்டனர்.

இலங்கை வைத்தியக் கல்லூரி, ஆரம்பந்தொட்டு மிகவும் உயர்ந்த தரமுடைய படிப்பையும் பயிற்சியையும் நிலைநாட்டியது. இன்று வைத்தியக் கல்லூரி, இலங்கைப் பல்கலைக் கழகத்தின் ஒரு முக்கியமான பகுதியாகும். மற்றத் துறைகளிலும் பார்க்க வைத்தியத் துறையின் வைத்தியர்களும் அப்போத்திக்கரிகளும் ஆரம்பந்தொட்டு இலங்கையராகவே அமைந்தனர்.

காலகெதியில் விசேட மருத்துவ நிலையங்கள் பல ஆரம்பிக்கப்பட்டன. 1893 இல் கண், காது, குரல்வளை நோய்களைப் பரிகரிப்பதற்கு ஓர் வைத்தியசாலை நிறுவப்பட்டது. 1899 இல் டி சொய்சா கிருமி ஆராய்ச்சி நிலையம் (De Soysa Bacterio logical Institute) ஆரம்பிக்கப்பட்டது.

1906இல் விக்றோரியா, இராணி ஞாபகார்த்த கண் வைத்திய சாலை திறக்கப்பட்டது. விசர் நாய்க்கடி வைத்திய நிலையம் 1918 இல் ஆரம்பமாகியது. கயரோக நிவாரண நிலையங்கள் கந்தானை, காங்கேசன்துறை எனுமிடங்களில் ஆரம்பிக்கப்பட்டன. தந்தரோக (பல் வியாதி) நிவாரண சாலை 1927 இல் நிறுவப்பட்டது. 1930 இல் 120 அரசாங்க வைத்திய சாலைகளும் 731 டிஸ்பென்சரிகளும் இருந்தன.

**உள்ளூராட்சி முறையின் வளர்ச்சி**

புராதன காலந்தொட்டு கிராம மக்களின் வாழ்விலும் தொழிலிலும் கம்சபாக்கள் மிகவும் உபயோகமுள்ள ஒரு நிறுவகமாக இருந்து வந்தன. இம்முறை 1833 இல் பயனிழந்து போய், 1855 இல் ஆளுநர் உவாட் அதனைப் புனருத்தாரணம் செய்தார். 1876 இல் றொபின்சன், அதற்கு மேலும் புது அதிகாரங்களை வழங்கி, அதனைக் கிராம வாசிகளுக்கு அதி பயனுடைய தாபனமாக மாற்றி அமைத்தார். இதுபற்றி முன்னர் பல கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளதால் இங்கு விவரிக்கப்படவில்லை.

**பிரதிநிதித்துவ ஆட்சி முறை பற்றிய எண்ணக்கரு [illegible]**

1835 இல் கோப்பியுடன் ஆரம்பித்து, 20 ஆம் நூற்றாண்டில் தேயிலை, இறப்பர், தென்னை எனும் பயிர்களின் உற்பத்தியில் முடிவடைந்த பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை, குடியானவர் வாழ்க்கையிலும் பல மகத்தான மாற்றங்களை ஏற்படுத்தியது. அதன் அடிச்சுவட்டில் தெருக்கள், புகையிரதவீதிகள், தபால், தந்தி இயந்திரங்களின் உபயோகம் போன்ற துறைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் யாவும் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்து பல நூற்றாண்டுகளாக இலங்கையில் நிலவிவந்த பழைய வாழ்க்கை முறைகளை தகர்த்தெறிந்தது மன்றி நவீனகாலப் புதுவாழ்க்கை முறைகளையும் புகுத்தலாயின.

வளரும் பிரதிநிதித்துவ ஆட்சி முறையைப் பற்றிய கொள்கை இலங்கை வாழ் மக்களுக்கு ஒரு புது அனுபவமாகும். 19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் சிங்களவரும் தமிழரும் அரசியலில் பங்கு பெற வேண்டு மென்ற அவாவில்லாதவர்களாக வாழ்ந்த னர். ஆங்கிலத் தோட்டத்துரைமாரும் பறங் கியருமே அரசியல் அதிகாரத்தின் தன்மையை நன்கறிந்து, அதனைத் தம் ஆதிக்கத்தின் கீழ் வைத்திருப்பதில் முனைந்தனர். விரைவில் இலங்கையரும் பிரதிநிதித் துவ ஆட்சி முறையின் நலன்களை உணரத் தொடங்கினர். சட்ட சபையில் பிரதி நிதித் துவமும் வாக்குரிமையும் தமக்கு வேண்டுமென்ற இயக்கம் வளர்ந்தது.

கொழும்பு மாநகர சபை அங்கத்தவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான 1865ஆம் ஆண்டின் 17ம் இலக்க கட்டளைச் சட்டத்தின் மூலம் தேர்ந்தெடுப்புக்குரிய தேரதல் முறைப் பிரதிநிதித்துவம் எனும் எண்ணக்கரு இலங்கைக்கு அறிமுகமானது.

**இலங்கையின் அரசியல் அபிவிருத்தி**

எமது நாட்டின் வரலாற்றில் சட்டமன்றத்தின் அமைவும் வாக்குரிமையும் இன்றும் மிக முக்கியமான தொன்றாகும். எமது நாடு 1505-1658 வரை போர்த்துக்கேயரினாலும் 1658-1796 வரை ஒல்லாந்தரினாலும் 1796-1948 வரை ஆங்கிலேயரினாலும் ஆட்சி செய்யப்பட்டது. போர்த்துக்கேயர் மற்றும் ஒல்லாந்தரை பொறுத்த வரை அவர்கள் பெரும்பாலும் அர சியலில் ஈடுபாடு காட்ட வில்லை. இவர்கள் இலங்கையில் பொருளாதாரத்தை பெற்றுக் கொள்ள எத்தனித்தார் களே தவிர, அரசிய லில் எந்தவொரு திட்டமிட்ட ஏற்பாட்டினையும் வழங்கவில்லை. இந்த நிலையில் ஓர் அரசியல் அமைப்பின் கீழ் இலங்கை ஆட்சி முறையை உருவாக்கிய நாடாக பிரித்தானியாவைக் குறிப்பிடலாம்.

1802ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதி இலங்கை முடிசார் குடியேற்ற நாடாகப் பிரகடனப்படுத்தப்பட்ட பின் பிரித்தானிய இலங்கை என அழைக்கப்பட்டது. குடியேற்ற நாட்டு முறைப்படி எல்லா அதிகாரமும், சட்டங்கள் ஆக்கும் அதிகா ரமும் அச் சட்டங் களை நடைமுறையிற் கொண்டு வரும் அதிகாரமும் ஒரு தனி மனிதரின் பொறுப்பிலேயே விடப்பட் டன.

அவரது பரிபாலனக் கருமங்களில் அவருக்கு உதவிசெய்ய சிவில் சேர்விஸ் உத்தியோக வர்க்கம் இருந்தது. மக்களுக்கு எவ் விதமான பங்கும் அதிகாரமும் இருக்கவில்லை.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர்...

ஆசிரியர் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வது தொடர்பான அறிவிப்பை கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு வெளியிட்டுள்ளது.

அமைச்சின் செயலாளர் நாலக கலுவெவவின் கையொப்பத்துடன் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள் ளது.

2023ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25ஆம் திகதி இடம்பெறவிருந்த பாடசாலை அபிவிருத்தி அதிகாரிகள் உள்ளிட்ட அரசுப் பணியில் உள்ள பட்டதாரி அதிகாரிகளை ஆசிரியர் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற் கான போட்டிப் பரீட்சை தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்படும் பல வழக்கு நடவடிக் கைகள் தற்போது முடிவுக்கு வந் துள்ளதாக கல்வி அமைச்சு தெரி வித்துள்ளது.

இருப்பினும் மேன்முறைமீட்டு நீதி மன்றத்தில் விசாரிக்கப்படும் வழக்கு இன்னும் முடிவடையாததால் அந்த வழக்கிலும் தீர்ப்பு வழங்கப்பட்ட பிறகு மேற்குறிப்பிட்ட பரீட்சை தொடர்பாக அடுத்தகட்ட நடவடிக்கை மேற்கொள் ளப்படும் என்று கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு தெரி வித்துள்ளது. (ம-7)

## பொலிகண்டி...

இச்சம்பவம் தற்செயலாக ஏற்பட் டதா இல்லை யாரும் விஷமிகளால் ஏற்படுத்தப்பட்டதா? என மேலதிக விசாரணைகளை வல்வெட்டித்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்ற னர்.

இச்சம்பவத்தின் போது பல இலட் சம் பெறுமதியான படகு மற்றும் கடற் றொழில் உபகரணங்கள் தீக்கிரையாகி உள்ளன எனத் தெரியவருகிறது. (ம-7,104)

## நாடு திரும்பும்...

நா.வேதநாயகனால், ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவுக்கு முன்வைக் கப்பட்ட கோரிக்கைக்கு தீர்வு காண் பதற்கான அமைச்சரவைப் பத்திரம் முன்வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக் கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச் சுக்கு பிரதியிடப்பட்டு ஜனாதிபதிக்கு வடக்கு மாகாண ஆளுநரால் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

இதற்கு அமைவாக போர்க்காலச் சூழ்நிலையில் அங்கீரிக்கப்பட்ட துறை முகம் மற்றும் முறையான கடவுச்சீட் டுக்களைப் பயன்படுத்தாமல் நாட்டை விட்டு வெளியேறி இந்தியாவில் தஞ் சம் பெற்ற இலங்கைக் குடியுரிமை உறுதிசெய்யப்பட்ட நபர்கள் தாமாக முன்வந்து நாட்டுக்குத் திரும்புவதற் கான குடியேற்ற அனுமதி வசதி களை வழங்குதல் என்ற தலைப்பில் அமைச்சரவைப் பத்திரம் முன்வைக் கப்பட்டதாகவும், அமைச்சரவை முடி வின்படி தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக சட்டமா அதிபரி டம் ஆலோசனை கோரப்பட்டுள்ளது என்றும் பொதுமக்கள் பாதுகாப்பு மற் றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச் சால் ஆளுநருக்கு தெரிவிக்கப்பட் டுள்ளது. (ம-7)

## செம்மணிப்...

பணிகள் கடந்த செப்ரெம்பர்மாதம்6ஆம் திகதியுடன் முடிவடைந்துள்ளன.

கட்டம் கட்டமாக 54 நாட்கள் நடை பெற்ற அகழ்வுப் பணிகளின் போது, இதுவரையில் 240 என்புத் தொகுதி கள் அவதானிக்கப்பட்ட நிலையில், அவற்றில் 239 என்புத்தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் புதைகுழிக்கு அரு கில் மேலும் மனிதப் புதைகுழிகள் காணப்படலாம் என ஸ்கான் அறிக்கை உள்ளிட்ட நிபுணத்துவ அறிக்கை ஊடாக சந்தேகிக்கப்படுவதால் மேலும் 08 வார காலப் பகுதிக்கு அகழ்வுப் பணிகளை முன்னெடுக்க நீதிமன்றி டம் சட்ட வைத்திய அதிகாரி செல்லையா பிரணவன் விண்ணப்பம் செய்த நிலை யில் மன்று அதற்கான செலவீனப் பாதீட்டை மன்றில் சமர்ப்பிக்க உத்தர விட்டிருந்தது.

இந்நிலையில், கடந்த வழக்கு தவணையின் போது மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிக்கான பாதீட்டு அறிக்கை மன்றில் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில், அதற்கான அங்கீகார அறிக்கை நேற்று தாக்கல் செய்யப்படும் என எதிர்பார்க்கப்பட்டிருந்தமை குறிப் பிடத்தக்கது. (ம-7,3)

## நாட்டை...

அவர் மேலும் தெரிவிக்கையில், விசாரணைகளின்படி குற்றங் களில் தொடர்புடையவர்கள் அரசியல் ஆர்வலர்களாக இருந்தாலும் இல்லா விட்டாலும் சட்டம் அமுல்படுத்தப் படும் என்று அவர் தெரிவித்தார்.

இந்தக் குற்றங்களை நாட்டை ஆண்ட ஆட்சியாளர்களே செய்தார் கள் எனவும், அவர்கள் குற்றங்களை மூடி மறைத்தனர் எனவும் அவர் தெரி வித்தார்.

மேலும், வசிம் தாஜுதீன் 2012 இல் கொலை செய்யப்பட்டார்.

2015 ஆம் ஆண்டு பத்திர மோசடி இடம்பெற்றதோடு 2019 இல் உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்பு தாக்குதல்கள் இடம்பெற்றன.

இந்தச் சம்பவங்களில் சம்பந்தப் பட்டவர்கள் யாராயினும் சட்டம் செயற் படும் என அமைச்சர் தெரிவித்தார்.

எனினும் இந்தக் குற்றங்கள் தொடர் பான விசாரணை களில் அரசாங் கம் தலையிடாது என அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார். (ம-7)

## வவு...

தெரிவித்தனர்.

கிரிபத்கொட பொலிஸ் பிரிவில் ரி56 துப்பாக்கி வைத்திருந்த சந் தேக நபர் கைது செய்யப்பட்டதை அடுத்து நடத்தப் பட்ட விசாரணை களின் போது இந்த இரண்டு சந்தேக நபர்கள் தொடர்பான தக வல்கள் தெரிய வந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை, அந்த விசா ரணையுடன் தொடர்புடைய, 10 கைக்குண்டு களை முகத்து வாரம், அளுத் கமவில் பொலி ஸார் நேற்று முன்தினம் (30) கண்டுபிடித்துள் ளனர். (ம-7)

## ஜெனிவா...

தலைவர் சிவ ஞானம் சிறீதரன், நேற்று முன் தினம் ஜெனிவா பயணமாகியுள் ளார்.

ஐக்கிய நாடு கள் மனித உரி மைகள் உயர்ஸ் தானிகர் அலு வலகத்தினதும், பிரிட்டன் தலை மையிலான இணை அனு சரணை நாடு களினதும் பிரதி நிதிகளுடன் சந்

திப்புக்களை அவர் நடத்துவார் என் றும், அதன்போது தமிழர்களின் பிரச் சினைகள் குறித்து கலந்துரையாடப் படும் என்றும் எதிர்பார்க்கப்படுகின் றது. (ம-7)

## முகமாலை...

அப்பிரதேசத்தில் ஆபத்தான குண்டு கள் காணப்பட்டுள்ளன. இதனை யடுத்து வீட்டு உரிமையாளர் உடனடி யாக பளை பொலிஸாருக்கு அறிவித் துள்ளார்.

அதன்பின்னர் கிளிநொச்சி நீதி மன்றத்தின் உத்தரவுடன் பாதுகாப் பான முறையில் வெடிகுண்டுகள் மீட்கப்பட்டுள்ளன. (ம-7,104)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2025.10.01
சீட்டிழுப்பு இலக்கம் 5969
X 6 2 2 0 2 5
அத சம்பத
X 2 0 2 5
சீட்டிழுப்பு இலக்கம் 0544
National Lotteries Board

சுப தவசக்
திகதி 2025.10.01
சீட்டிழுப்பு இலக்கம் 0085
மிதுனம் 17 25 30 36

தன நிதானய
திகதி -2025.10.01
சீட்டிழுப்பு இலக்கம் - 1999
E 26 37 45 55 E

மெகா பவர்
திகதி 01/10/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2317
Q 25 48 58 60 77

ஜய
திகதி 2025.10.01
சீட்டிழுப்பு இலக்கம் 0237
Y 1 2 9 7

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4211
சீட்டிழுப்பு திகதி 01.10.2025
G 08 09 19 23
G
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.10.01
சீட்டிழுப்பு இலக்கம் 1278
துலாம் 01 19 24 44 துலாம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுபிரி வாசனா
01.10.2025 வெற்றி வாரம் 0677
X 0 5 4 4 8 5
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.25,467,191.20
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2943
சீட்டிழுப்பு திகதி 2025.10.01 தினம் புதன்கிழமை
56 58 74 79 G
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.63,981,576.00

சனிதா
திகதி 01.10.2025 வெற்றி வாரம் 5104
09 18 31 40 T
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 59,236,636.00

ஜயோதா Jayoda
திகதி 2025.10.01 வெற்றி வாரம் 2166
06 19 50 66 F
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 31,994,338.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4655
சீட்டிழுப்பு திகதி 01.10.2025 தினம் புதன்கிழமை
14 15 56 57 கன்னி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,943,335.60

லக்பிம
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
T 19 15 22 35 37
சீட்டிழுப்பு வாரம் 2119
01.10.2025 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.597,431,844.40

அட கோடிபதி ADA KOTIPATHI
புதன்கிழமை
வெற்றி வாரம் : 2769
சீட்டிழுப்பு திகதி : 2025.10.01
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.56,604,871.20
07 37 41 50 Y

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரு இளைஞர்களுக்கு எமனான அதிவேகம்

அநுராதபுரம் - ஹொரவப்பொத்தானை வீதியின் கட்டு வரகொல்லேவ பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இரு இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர்.

ஹொரவப்பொத்தானை நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் எதிர்திசையில் பயணித்த பஸ்ஸுடன் மோதியதில் இந்த விபத்து சம்பவித்துள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் ஹொரவப்பொத்தானை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளின் அதிக வேகமே விபத்துக்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

## சர்வதேச...

வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் தமிழ் மக்களுக்குச் சர்வதேச நீதி கோரி யாழ். செம்மணியில் நடத்தப்பட்ட சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டம் நேற்று நிறைவுக்கு வந்தது.

இறுதி நாளான நேற்று சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் பாரிய தீப்பந்தப் போராட்டமும் முன்னெடுக்கப்பட்டது.

இலங்கை விவகாரம் தொடர்பாக உள்ளகப் பொறிமுறையை வலியுறுத்தும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அறிக்கையும் போராட்டக்காரர்களால் தீயிட்டு எரிக்கப்பட்டது.

இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டு யுத்தத்தின்போது நிகழ்த்தப்பட்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் உள்ளிட்ட விவகாரங்களுக்கு நீதி வேண்டியும், உள்நாட்டுப் பொறிமுறையை நிராகரித்தும், சர்வதேச விசாரணையை வலியுறுத்தியும், செம்மணி மனிதப் புதைகுழி விவகாரத்துக்கு நீதி கோரியும் கடந்த 25 ஆம் திகதி ஆரம்பமான உண்ணாவிரதப் போராட்டம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வந்தது.

வடக்கின் ஐந்து மாவட்டங்களை சேர்ந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், செயற்பாட்டாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

போராட்டத்தின் இறுதி நாளான நேற்று மதியம் ஒரு மணியளவில் கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்த போராட்டக் காரர்கள், தீப்பந்தங்களையும் ஏந்தியிருந்தனர்.

அதேவேளை, சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி இனப்படுகொலை செய்யப்பட்ட சிறுவர்களுக்கு நீதி கோரியும் கோஷங்களை எழுப்பினர்.

போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் இலங்கையில் உள்நாட்டுப் பொறிமுறையை நிராகரிக்கின்றோம், தமிழின அழிப்புக்கும் உறவுகளை காணாமல் ஆக்கப்பட்டமைக்கும், போர்க் குற்றங்கள் மற்றும் மனிதப் புதைகுழிகளுக்கும் சர்வதேச சுயாதீன விசாரணையை மட்டுமே கோருகின்றோம் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்திருந்ததுடன் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கு அறிக்கையொன்றையும் அனுப்பி வைத்தனர். (ம-7,33,104)


### கார் சாரதி தேவை

மட்டுப்படுத்தப்பட்ட உள்ளூர் பயணங்களுக்காக அண்மையில் அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்ற கார் சாரதி தேவை. யாழ்ப்பாணத்தில் வசிப்பவர் விரும்பத்தக்கது. நேரில் வரவும்.

அக்ஷதை
ஆரியகுள சந்தி
(5565)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

### ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-4008) 076 825 7716 (ஆகாஸ்)

Techna
Technical Institute
A/L TECHNOLOGY STREAM

A/L தொழினுட்பப்பிரிவு
விஷேட கருத்தரங்கு
A/L 2025 BATCH
ஆரம்பம்
03.10.2025, வெள்ளி, மாலை 2.30 மணிக்கு

தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம்
03.10 வெள்ளி - 2.30PM - 5.30PM | 04.10. சனி 8.30AM - 5.30PM
05.10. ஞாயிறு - 8.30AM - 5.30PM | 06.10 திங்கள் 8.30AM - 3.00PM
S.சக்தி B.Sc(Hons), M.Sc

பொறியியல் தொழினுட்பவியல்
10.10 வெள்ளி - 2.30PM - 5.30PM | 11.10. சனி 8.30AM - 5.30PM
12.10. ஞாயிறு - 8.30AM - 5.30PM | 13.10 திங்கள் 2.30PM - 5.30PM
S.மயூரதன் B.Ed(Hons) ET, A.சஞ்சீவன் B.Ed(Hons) ET

உயிர் முறைமைகள் தொழினுட்பவியல்
10.10 வெள்ளி - 2.30PM - 5.30PM | 11.10. சனி 8.30AM - 5.30PM
12.10. ஞாயிறு - 8.30AM - 5.30PM | 13.10 திங்கள் 2.30PM - 5.30PM
P.நிறோஜனன் B.Sc(Hons), PGDE, M.விஷ்ணு B.Sc(Hons)

தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் — T.ஜதுபாலதரன் B.Sc (Hons), M.Sc (CS), PGDE
கணிதம் — T.சசிகரன் B.Sc
விவசாய விஞ்ஞானம் — S.சஜீவன் B.Ed(Hons) Agri
புவியியல் — S.P.கரன் B.A(Hons)
17.10 வெள்ளி - 2.30PM - 5.30PM | 18.10. சனி 8.30AM - 5.30PM
19.10. ஞாயிறு - 8.30AM - 5.30PM | 21.10 செவ்வாய் 2.30PM - 5.30PM
(5570)

அனுமதிகளுக்கு வீரசிங்கம் மண்டபம், 3ஆம் மாடி, யாழ்ப்பாணம். 077 170 3549

### காணி விற்பனைக்கு

தெல்லிப்பழை சந்திக்கு அருகாமையில் K.K.S வீதியில் இருந்து 100m ல் 1 ½ பரப்பு, 1 ¾ பரப்பு மற்றும் 2 பரப்புக் காணித் துண்டுகள் விற்பனைக்கு உள்ளது.
076 663 3199
(5527)

### உடனடி வேலைவாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமான பயணச்சீட்டுக்கள் | விரைவு பொதிகள் சேவைகள் | விசா சேவைகள்
40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம் (ஆண்கள் விரும்பத்தக்கது)
வெளிமாவட்டங்களில் வேலை செய்ய விரும்புவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் (தங்குமிடம் வழங்கப்படும்)
சம்பளம் 30,000/- இலிருந்து 50,000/-
எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை
(C-4007)
V2 TRAVELS 076 1410725 076 8226236
v2vacancies@gmail.com

### புலமை கல்வி நிறுவனம்


மாணவர்களுக்கான புலமைப்பரிசில் புதிய வகுப்புக்கள் விஜயதசமி இன்று ஆரம்பம்
தரம் - 4 (தற்போதைய தரம் - 3)
தரம் - 5 (தற்போதைய தரம் - 4)
ஆசிரியர் - திரு.க.கலாமோகன் (B.A, P.G.D.E, Dip.. in.. Teach..)
காலம் : 02.10.2025 வியாழக்கிழமை
நேரம் : தரம் - 4 : மாலை 4.05 மணி
தரம் - 5 : மாலை 4.45 மணி
Note : மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகளே வழங்கப்பட உள்ளதால் பதிவுகளுக்கு முந்தவும்.
(5530)
தொடர்புகளுக்கு - 077 212 1915
சோதிவேம்படி லேன், மானிப்பாய்.

### We're Hiring!
### பெண் பணியாளர் தேவை

- O/L, A/L முடித்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.
- முன் அனுபவம் தேவையில்லை.
- சாரதி அனுமதிப்பத்திரம் வைத்திருத்தல் விரும்பத்தக்கது.
- பெண்கள் விரும்பத்தக்கது.
- பற்சிகிச்சை நிலையத்தில் பணியாற்றியவர்கள், தாதியர் பயிற்சி முடித்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.
- தூர இடங்களில் இருந்து வருபவர்களுக்கு தங்குமிட வசதி செய்து தரப்படும்.

வேலை நேரம் :-
08.30a.m - 06.30p.m / 12.00p.m - 08.00p.m
Send your CV and Portfolio & For more information :
076 771 2172 / 077 998 1914
(1614)

### பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு. விஜயபாலசிங்கம் மதிசங்கர்
SLTS 2 - II, B.A (Hons) in Psychology
PGDSNE, Dip in counselling

கொழும்பு SLIIT UNIஇல் M.Ed பட்டத்தினைப் பெற்ற எமது பாடசாலை ஆசிரியர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் இவர்கள் மேலும் பல பட்டங்கள் பெற வாழ்த்தி மகிழ்கின்றோம்
Congratulation



திரு.ச.நிபோஜன்
SLTS 2 - II, Dip in tech
BEd (Hons) Agricultural

வாழ்த்துவோர்:
ஆசிரியர் கழகம், யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி
(5569)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.10.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.